With the best compliments from the Editor to
The Director of Government Museum, Madras

ஆராய்ச்சி

திங்களிதழ்

ARAICHI - MONTHLY EDITOR - K. P. RAJU, B.A.,

மலர்-1	ஜூலை 1981	இதழ்-2

1210

1164

P 379

379

2246

ஆசிரியர்: க. ப. ராஜு

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

— குறள்

தனிப்பிரதி ரூ 2/- ஆண்டுச்சந்தா ரூ 25/-

நன்றி

படகு சமுதாய மக்களின் உண்மையான வரலாற்றைக் காண 'ஆராய்ச்சி' ஆசிரியர் இனியும் செய்ய வேண்டியிருக்கிற ஆராய்ச்சிப் பணிகளை முடிப்பதற்காகவும் இவ்வரலாறு சம்பந்தமான முழுவிபரங்களையும் 'ஆராய்ச்சி' பத்திரிகையில் வெளியிடுவதற்காகவும் ஆசிகூறி இதுவரை நன்கொடைகள் அளித்த கீழ்க்கண்ட நண்பர்களுக்கும் பெரியோர்களுக்கும் ஆசிரியரின் உளமார்ந்த நன்றி.

உயர்திரு	K. N. புல்லாகவுடர், கோடமலை	ரூ.	50-00
,,	B. குள்ளன். B.A., B.T., தலைமை ஆசிரியர், ஸ்ரீ சற்குரு உயர்நிலைப்பள்ளி, குன்னூர்	ரூ.	200-00
,,	N. மாதன், B.A., B.T., பிக்கோள்		100-00
,,	K. K. ராமன், B.A., B.T., கீழ்குந்தா	ரூ.	100-00
,,	M. ராமன், B.A., பஞ்சாயத்து யூனியன் முன்னாள் தலைவர், கோடேரி	ரூ.	100-00
,,	L. ஜோதிலிங்கம், B.Com., ஹுலிக்கல்	ரூ.	101-00
,,	N. சிராங்கி கவுடர், கிண்ணக்கொரை	ரூ.	101-25
,,	H. B. தேவராஜ், M.A., LL.B., ஹுப்பதலை	ரூ.	100-00
,,	J. அர்ஜுனகவுடர், எடக்காடு, நடுஹட்டி	ரூ.	100-00
,,	டாக்டர் N. ஜோகி, M.B., B.S., குன்னூர்	ரூ.	200-00
,,	B. கிருஷ்ணமூர்த்தி, பிக்கோள்	ரூ.	50-00
,,	T. மாதாகவுடர், முள்ளிமலை	ரூ.	30-00
,,	K. குள்ளாகவுடர், குந்தாபிக்கட்டி	ரூ.	100-00
,,	B. N. ராமா கவுடர், மைனலை, பெங்கால்மட்டம்	ரூ.	50-00
,,	K. பொக்கே கவுடர், B.A., Ex. M.L.A., பிக்கட்டி.	ரூ.	100-00
,,	A. S. கிருஷ்ணராஜேந்திரன், B.Sc., B.L., அணிக்கொரை	ரூ.	200-00
,,	A. R. தருமன், M.A., ஏக்கோணி	ரூ.	100-00
,,	K. நந்தி, அணிக்கொரை	ரூ.	100-00
,,	K. போஜா கவுடர், Ex. M.L.A., முள்ளிமலை	ரூ.	100-00
,,	M. N. பெள்ளா கவுடர், மஞ்சகம்பை	ரூ.	101-00
,,	S. K. ஜோகி கவுடர், B.A., B.Sc., (Ag) நஞ்சநாடு	ரூ.	100-00
,,	Dr. K. N. ராமன், M.B., B.S., குன்னூர்	ரூ.	50-00

ஆராய்ச்சி

'ஆராய்ச்சி' வெளியீட்டு விழா

'ஆராய்ச்சி' பத்திரிகையின் வெளியீட்டு விழா 1981 ஜூன் 14-ந் தேதியன்று உதகைக் கூட்டுறவாளர் விருந்தினர் மாளிகையில் நடைபெற்றது ஓய்வு பெற்ற கல்லூரி முதல்வரும் பன்னூலாசிரியருமான டாக்டர் M. ஹாலய்யா M.A., M S., Ph.D. அவர்கள் இவ்வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். முன்னாள் பள்ளித் துணை ஆய்வாளரும், குன்னூர் ஸ்ரீ சற்குரு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரும், 'ஆராய்ச்சி' பத்திரிகையின் காப்பாளருமாகிய (Patron) திரு B. குன்னன் B. A., B. T. அவர்கள் இவ்விழாவிற்கு வருகை தந்த பெரியோர்களையும் நண்பர்களையும் வெளியீட்டு விழாக் குழுவின் சார்பாக வரவேற்று இத்திங்களிதழுக்கு அன்பர்கள் ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

உதகை ஸ்ரீ ஆசிரம நிறுவனர் தவத்திரு சுவாமி தேவிதயாநந்தா அவர்கள் 'ஆராய்ச்சி' ஆசிரியர் வெகுநாட்களாக ஆராய்ந்து கண்டுள்ள வரலாற்று உண்மைகளை வெளியிடுவதுடன் சமுதாயத்திற்குப் பயன் கிடைக்கும் வகையில் பல விஷயங்களையும் பற்றி எழுதி பலலாண்டுகள் சேவை செய்ய வேண்டுமென்று ஆசி கூறி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு M. K. நஞ்சா கவுடர் அவர்களும், உதகை அரசினர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியரும், 'ஆராய்ச்சி' பத்திரிகையின் காப்பாளரும் (Patron) ஆகிய திரு N. மாதன் B. A., B. T. அவர்களும், ஓய்வு பெற்ற எல். ஐ. சி. கிளை மேலாளர்

திரு A. பெள்ளி கவுடர் அவர்களும், 'ஆராய்ச்சி' பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்த்து அருந்தொண்டாற்றி வரும் நண்பர்களில் ஒருவராகிய திரு K. பேப்பா கவுடர் அவர்களும், இத்திங்களி தழை அச்சிடும் பொறுப்பை ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டுள்ள நண்பர் திரு K. பெள்ளி B., Sc. அவர்களும் சிறப்புரைகள் நிகழ்த்தி ஆசிரியர் எடுத்துக்கொண்டுள்ள முயற்சி வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்து கூறினர்கள்.

இப்பத்திரிகையின் காப்பாளரும் சிறந்த பள்ளி ஆசிரியரென அரசாங்க விருது பெற்றவருமான திரு N. சிராங்கி கவுடர் அவர்கள் விழாத் தலைவரிடம் 'ஆராய்ச்சி' முதல் இதழின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டு இப்பத்திரிகை ஆசிரியர் செய்துள்ள சரித்திர ஆராய்ச்சியின் உண்மைகளை மக்கள் அறியும்படி வெளியிட அனைவரும் ஆதரவளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய டாக்டர் ஹாலய்யா அவர்கள் 'ஆராய்ச்சி' என்ற பெயரில் இப்பத்திரிகை வெளியிடப்படுவதைப் பற்றி தாம் மகிழ்ச்சி அடைவதாகவும், இப்பத்திரிகை வரலாற்றுத் துறையில் மட்டுமின்றி விஞ்ஞானம், வேளாண்மை, கல்வி, பொருளாதாரம் போன்ற பல துறைகளிலும் பயனுள்ள விஷயங்களை வெளியிட வேண்டுமென்றும் கூறினர். அவர் மேலும் பேசுகையில் ஆசிரியர் வெளியிடும் வரலாற்றுக் கட்டுரைகளை ஆங்கிலத்திலும் வெளியிட வேண்டுமென்று யோசனை கூறி இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு ஒவ்வொருவரும் ஆக்க பூர்வமான உதவியையும் ஒத்துழைப்பையும் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

'ஆராய்ச்சி' வெளியீட்டு விழாவுக்கு அன்பு கூர்ந்து வருகை தந்து ஆண்டுச் சந்தா கொடுத்து ஆசிகூறிய சுவாமிஜீ அவர்களுக்கும், விழாவிற்குத் தலைமை தாங்கிய திரு ஹாலய்யா அவர்களுக்கும், விழாவிற்கு வந்திருந்து சிறப்பித்த ஏனைய பெரியோர்களுக்கும் நண்பர்களுக்கும் இப்பத்திரிகையின் காப்பாளர்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் ஆசிரியரின் உளம்கனிந்த நன்றி.

திருவாளர்கள் K. K. ராமன், B.A.,B.T., K. M. சிவலிங்கம், B.SC , B.T., B. ராமன், M.A., M.Ed., T. தாத்தன் B SC., B.Ed., G. கண்ணன், B SC., B Ed , N. S. போஜன், B.A., B.P.Ed., ஆகிய விழாக் குழுவினர்கள் இவ்விழா இனிதே நடந்தேற ஏற்பாடுகள் செய்தமைக்கு ஆசிரியரின் உளமார்ந்த நன்றி.

குறித்த காலத்தில் இப்பத்திரிகையை அச்சிட்டு கொடுத்த அண்ணா அச்சக நண்பர்களுக்கும் ஆசிரியரின் நன்றி உரித்தாகும்.

பிழைகள்

முதல் இதழில் சில எழுத்துப்பிழைகள் ஏற்பட்டுள்ளதைப் பற்றி வருந்துகின்றோம். அன்பர்கள் பிழை பொறுத்து, விஷயங்களில் கவனம் செலுத்தியிருப்பார்களென்று நம்புகின்றோம். பிழைகள் இல்லாமல் இப்பத்திரிகையை இன்னும் நல்ல முறையில் அச்சிட்டு வெளியிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சென்ற இதழில் 18-ஆம் பக்கத்தில் 'சேலம் ஜில்லாவை அடுத்த கிருஷ்ணகிரி ஜில்லாவிலுள்ள தர்மபுரியும்' என்றுள்ளதை 'சேலம் ஜில்லாவை அடுத்த தர்மபுரியும்' என்று திருத்தி வாசிக்க வேண்டுகின்றோம்.

வேறு கட்டுரைகள்

பொருள் வசதி குறைவால் இப்பத்திரிகையின் பக்கங்கள் நாற்பதுக்கும் மேற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. எந்தெந்த இதழ்களில் ஆசிரியரின் ஆராய்ச்சி கட்டுரைகள் 40 பக்கங்களுக்குக் குறையுமோ அந்தந்த இதழ்களில் இதர கட்டுரைகள் இடம் பெறும்.

இவ்வாராய்ச்சியினால் பயனென்ன?

இந்த வரலாற்று ஆராய்ச்சியினால் பயனென்ன என்று சிலர் நினைக்கக் கூடும். வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் உண்மைகளைக்காண முயலுகின்றார்கள். வரலாற்று ஆராய்ச்சியினால் இது வரை நாம் அறியாத புதிய புதிய விஷயங்கள் பலவற்றை நாம் அறிய முடிகின்றது. இந்த அறிவால் சமுதாயத்திற்கு நன்மை ஏற்படும். தனது வரலாற்றை அறிவதனால் ஒரு சமுதாயம் அதன்

பழங்காலப் புகழ்மிக்க வாழ்க்கையையும் அது சீரழிந்த வரலாற்றையும் அறிவதுடன் அவைகளுக்கான காரண காரியங்களையும் அறிய முடியும். இதிலிருந்து பல படிப்பினைகளைப் பெற்று அச்சமுதாயம் பிற்காலத்தில் பயனடைய முடியும். ஆனால் அறிஞர் ஆல்டோல்ஸ் ஹக்ஸ்லி அவர்கள் கூறியுள்ளது போல் மனிதன் துரதிஷ்டவசமாக சரித்திரத்திலிருந்து எவ்விதப் படிப்பினையையும் கற்றுக்கொண்டதில்லை. "எந்த மனிதனும் எப்போதாகிலும் சரித்திரத்திலிருந்து பாடம் ஏதும் கற்றுக் கொண்டதிலலை என்பது தான் சரித்திரம் நமக்குச் சொல்லும் பாடம்" எனறு அவர் கூறுகின்றார். ('The lesson that we learn from history is that no man has ever learnt any lesson from history'—Aldous Huxley). இதன் உட்கருத்து யாதெனின் சரித்திரத்திலிருந்து மனிதன் பாடம் கற்றுக்கொண்டு பயனடைய வேண்டுமென்பதாகும். சரித்திரத்திலிருந்து நாம் சரியான பாடம் கற்றுக்கொள்ள தவறினால் அது நம்முடைய குறையே யன்றி சரித்திரத்தின் குறையல்ல.

தமிழ்நாடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் உயர்திரு
K. பொக்கே கவுடர் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

நண்பர் திரு க. பா. ராஜு அவர்கள் நீலகிரி படக சமுதாய மக்களின் வரலாறு விஷயமாகப் பல வருஷங்களாக ஆராய்ச்சி செய்து படக சமுதாய முன்னோர்களின் பிறப்பிடம் மெசபட்டோமியா என்றும், அவர்கள் அங்கிருந்து ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா கண்டங்களின் பல நாடுகளில் மிகப் பண்டைக்காலத்தில் பரவியிருந்திருக்கிறார்களென்றும், அவர்கள் கி. மு. 4000 வருஷங்களுக்கு முன் இன்றைய ஆப்கனிஸ்தான், பாக்கிஸ்தான் ஆகிய பிரதேசங்களில் குடியேறி நாளடைவில் இந்தியாவின் பல பாகங்களிலும் பரவினார்களென்றும், அவர்கள் பல இடங்களில் ராஜ்ஜியங்கள் நிறுவி அரசாண்டு வந்துள்ளார்களென்றும், அவர்கள் ராஜபுத்திரர்களென்றும் தக்க ஆதாரங்களுடன் சொல்லுவதைக் கேட்கும் போது படக சமுதாய மக்களின் பண்டைய வரலாறு புகழ் மிக்கதாக இருந்துள்ளது என்பது கண்கூடு.

கி. பி. 1116-லிருந்து 1162 வரை நீலகிரியை ஆண்டு வந்த படக அரசனாகிய காளராஜன் மைசூரை ஆண்ட ஹொய்சள அரசனை எதிர்த்து போரிட்டான் என்று கல்வெட்டுகள் கூறும் உண்மையைக் கண்டுபிடித்திருப்பது படகப் பெருங்குடி மக்களுக்கு மிகப் பெருமை தரக்கூடியதாக உள்ளது. திரு ராஜு அவர்களுடைய ஆராய்ச்சி படக சமுதாய மக்களுக்கு ஒரு புத்துணர்ச்சியையும் தன்னம்பிக்கையையும் உண்டாக்குமென்று நம்புகிறேன். திரு ராஜு அவர்களுக்கு படக சமுதாயம் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளது.

படக சமுதாய முன்னோர்களைப் பற்றி அவர் ஆராய்ந்து கண்டுள்ள வரலாற்று விஷயங்களையெல்லாம் வெளியிடுவதற்காக **'ஆராய்ச்சி'** என்னும் பத்திரிகையை ஆரம்பித்திருப்பதைப் பற்றி அவரை நான் பாராட்டுகிறேன். அவர் இது விஷயமாக இன்னும் ஆராய்ச்சி நடத்தி விரிவான ஒரு சரித்திர நூல் வெளியிடும்படி அவருக்கு நாம் எல்லா ஆதரவும் அளிக்க வேண்டும்.

இம்மகத்தான பணியில் அவருக்கு வெற்றி கிடைக்க ஆண்டவன் அருள்புரிவாராக. நண்பர் ராஜு அவர்களுக்கு எனது உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

கே. பொக்கே கவுடர், B.A., EX. M.L.A.

குந்தா பிக்கட்டி,
15-7-1981.

அத்தியாயம்- 3

நினைவுச்சின்னங்கள்.

இனி நீலகிரியில் பரவலாகக் காணப்படுகின்ற பலவகை நினைவுச் சின்னங்கள் (Memorials) நமக்கு படகர்களின் தோற்றத்தைப் பற்றியும் (Origin) வரலாற்றைப் பற்றியும் ஏதாகிலும் விஷயங்கள் தெரிவிக்கின்றனவா என்று பார்ப்போம்.

இறந்தவர்களின் எறிக்கப்பட்ட எலும்புகளும் இதர பல விதமான பொருட்களும் புதைக்கப்பட்ட நான்கு வகையான நினைவுச்சின்னங்கள் நீலகிரியின் பல பகுதிகளில் காணப்படுகின்றன. அவைகளை இங்கு ஆராய்வோம்.

1. கற்குவியல்களும் கிணற்றுக் கைப்பிடிச் சுவர் போன்ற வட்டமான கல் கட்டிடங்களும் (Cairns):- இவைகளை ஆங்கிலத்தில் 'கெயிர்ன்' என்று சொல்லுகிறார்கள். இத்தகைய வட்டக் கட்டிடங்களை படகர்கள் 'ஹொக்கல்லு' என்று அழைக்கிறார்களென 'நீலகிரி கெஜெட்டீர்' சொல்லுகின்றது.[1]

2. மண்குவியல்கள் (Barrows).

கற்குவியல்கள் அல்லது வட்டக் கட்டிடங்களாக உள்ள நினைவுச் சின்னங்களைப் பற்றியும் மண் குவியல்களாக உள்ள நினைவுச் சின்னங்களைப் பற்றியும் நீலகிரி கெஜெட்டீரில் பின்வருமாறு விவரிக்கப் பட்டுள்ளது.

'' இவ்வித நினைவுச் சின்னங்கள் மற்ற வகைச் சின்னங்களைவிட ஏராளமாக உள்ளன. இவைகள் மலை உச்சிகளில் காணப்படுகின்றன. சில இடங்களில் பல கற்குவியல்களும் மண்குவியல்களும் ஒரே இடத்தில் காணப்படுகின்றன. இவைகளைப் படகர்கள் 'ஹொக்கல்லு' (அதாவது நாபிக்கற்கள்—Naval Stones) என்று அழைக்கிறார்கள். இவைகள் குந்தை நாட்டில் மிக மிகக் குறைவாக உள்ளன. அங்கே அவலாஞ்சி அருகில் சிறிய வட்டக்கட்டி

டங்கள் (Cairns) ஒரு சிலவே உள்ளன. தொதநாட்டில் இவை ஏராளமாக இருப்பதோடல்லாமல் அதிகமான நினைவுப்பொருட்களைக் கொண்டதாகவும இருக்கின்றன. வட்டக்கட்டிடங்கள் 10 முதல் 28 அடிவரை விட்டங்களுடையவைகளாகவும், மண் குவியல்கள் (Barrows) 20 முதல் 60 அடி வரை விட்டங்களுடையவைகளாகவும் அமைந்துள்ளன. அவைகளின் நடுவே இரண்டு தட்டையான நீண்ட கற்கள் தரையின் மேல் வடகிழக்கு—தென் மேற்காக வைக்கப்பட்டுள்ளன. வட்டக்கட்டிடப் புதைக்குழிகளிலும் மண் குவியல் புதைக்குழிகளிலும் காணப்படும் பொருள்கள் வருமாறு: எரிக்கப்பட்ட எலும்புகளும், சாம்பலும், சட்டி பானைகளும், இரும்பு ஆயுதங்களும், இரும்பால் செய்யப்பட்ட வீட்டு உபயோகத்திற்கான உபகரணங்களும், ஒரு சிலபித்தளைப் பாத்திரங்களும், ஒன்றிரண்டு பித்தளை மற்றும் செம்பு ஆயுதங்களும், சில தங்கநகைகளும், கண்ணாடியினாலும் ரத்தினக்கல்லாலும் சிவப்பு மாணிக்கக் கல்லாலும் செய்யப்பட்ட மணிமாலைகளும் (Beads of glass, agate and cornelian). இவ்விருவகை நினைவுச் சின்னங்களும் ஒரே காலத்தைச் சேர்ந்தவைகளாகக் காணப்படுகின்றன.

''இவ்விருவகைப்புதைக் குழிகளில் சர்வ சாதாரணமாகக் காணப்படும் பொருட்கள் மண்பாத்திரங்களே. இவைகள் இக்காலத்திய மண் சட்டிகளைப் போல் சாதாரண மண்ணினால் செய்யப்பட்டவைகள்தான். சில இடங்களில் காணப்பட்ட மட்பாத்திரங்கள் பளபளப்பாகவும் காக்காய்ப் பொன்னினால் (Mica) மெருகு பூசபட்டவைகளாகவும் உள்ளன. சில சட்டிகளின் வடிவங்கள் அலாதியானவை (Unique). இத்தகைய வடிவங்கள் தென்னிந்தியாவில் வேறு எங்கும் காணப்படவில்லை. இறந்தவர்களுடைய எலும்புகளையும் சாம்பலையும் கொண்டுள்ள சட்டிகள் தட்டையானவைகளாயும் அழகற்ற முறையில் புள்ளிகளாலும் வட்டங்களாலும் அலங்கரிக்கப் பட்டவைகளாயும் உள்ளன. இவைகள் சாதாரணமாக 4 அல்லது 5 அடி ஆழத்தில் புதைக்கப்பட்டுள்ளன. தரைமட்டத்தின் பக்கம் பலவிதமான மண்பாத்திரங்களின் மாதிரிகள் (Models) காணப்படுகின்றன. அவை உருண்டை அல்லது கூரிய வடிவமான அடிதளத்தை உடையவைகளாயும், தூண்களைப் போன்ற நீண்ட உருண்டை வடிவத்தையுடையவைகளாயுமிருக்கின்ற காலி கூஜாக்கள். அவைகள் வட்ட

வடிவமான தாங்கிகளின் (Ring stands) மேலும், இளகிய மண், ணில் ஊன்றியும் வைக்கப்பட்டுள்ளன. அவைகளின் மேலுள்ள மூடிகளில் பலதிறப்பட்ட அழகற்ற உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவைகள் நின்று கொண்டோ அல்லது குதிரைகளின் மேல் ஏறிக் கொண்டோ இருக்கும் மனிதர்களாகவும் (ஆண்களும் பெண்களும்), சிறுத்தைகளாகவும், வளைந்த பெரிய பெரிய கொம்புகளையுடைய எருமைகளாகவும், மயில்களாகவும், பல கிளைகளாகப் பிரிந்த கொம்புகளையுடைய மான்களாகவும், செம்மறியாடுகளாகவும், யானைகளாகவும் காணப்படுகின்றன. சில எருமைகளும் செம்மறியாடுகளும் கழுத்தில் மணி கட்டியவைகளாக இருக்கின்றன. மனிதர்கள் தாடி வளாத்தவர்களாக உள்ளார்கள். அவர்களின் தாடி குட்டையாக இருக்கும்படி வெட்டப்பட்டுள்ளது ஆண்களும் பெண்களும் அணிந்துள்ள தலைப்பாகையானது பிரிஜி குல்லாயைப் போன்றது (Like phrygian cap). நீலகிரிமலையின் குளிரிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் அணிந்துள்ள ஒரே ஒரு ஆடை அவர்கள் இடையிலே கட்டியுள்ள ஒரு சிறு துணியேயாகும். ஆனல் அவர்கள் கழுத்தில் ஆரமும் (Necklace) கையிலும் புஜங்களிலும் வளையல்களும் காப்புகளும் இதர அணிகலன்களும் அணிந்துள்ளார்கள். தோளிலிருந்து இடுப்புவரை குறுக்காகத் தோள் கச்சை (Cross-belt) அணிந்துள்ளார்கள்.

"குறுகிய பிடியுள்ள கோடாறிகள், ஈட்டித்தலைகள் (Spear-heads), வீசி எறியத்தக்க பளு குறைந்த ஈட்டிகள் (Javelins), அம்புகள் (Spears), சணடைக்கத்திகள் (Swords), குத்துவாள்கள் அல்லது உடைவாள்கள் (Daggers) ஆகியவைகள் இப்புதைக்குழிகளிலிருந்து எடுக்கப்பட்ட ஆயுதங்கள். அரிவாள்கள், க்ஷவரககத்திகள், வெட்டுக்கத்திகள் (Knives), பெரிய கத்திரிகள் (Shears), இடுக்கிகள் (Tweezers), விளக்குகள், ஆலய மணிகள் ஆகியவை அவைகளில் காணப்பட்ட வீட்டு உபகரணங்கள். இரும்புச்சாமான்களைக் காட்டிலும் கெடாமல் நல்ல நிலைமையில் இருக்கின்ற சில பித்தளைப் பாத்திரங்கள் வடிவத்தில் அழகாக இருப்பதோடல்லாமல் அவைகளின்மேல் மிகத் திறமையாகவும் நாசுக்காகவும் செதுக்கப்பட்டுள்ள கோடுகளையும் தாமரைப்பூ சித்திரங்களையும் பார்க்கும்போது அவைகள் கிரேக்க அல்லது எகிப்திய கலையை ஒத்தவைகளாக இருக்கின்றன. மற்ற நினைவுப் பொருட்களிலிருந்து இவை அலாதியாகக் காணப்படுகின்றன. தங்க

நகைகள் அழகான மாதிரிகளில் (Models) செய்யப்பட்டுள்ளன. மாலைகளாகக் கோர்க்கப்பட்டுள்ள மணிகள் சுத்தமாகத் துளைக்கப் பட்டவைகளாகவும் பலவகையான மாதிரிகளில் வரையப்பட்டு வரைக்கோடுகளின் பள்ளங்களில் ஒருவகை வெள்ளை எனுமலினால் நிறப்பப்பட்டவைகளாகவும் உள்ளன.

"இக்கற்குவியல்களையும் (அல்லது வட்டக்கட்டிடங்களை யும்) மண்குவியல்களையும் நிர்மாணித்தவர்கள் யார் என்பதைப் பற்றியும் அவைகளின் காலம் என்னவாக இருக்கும் என்பதைப் பற்றியும் பல அபிப்பிராயங்கள் சொல்லப்படுகின்றன உலகத்தின் பல பாகங்களிலும் இரும்புக் காலத்திற்கு முன் தனியானதொரு வெண்கலக்காலம் (Bronze Age) இருந்திருக்கின்றது. ஆனால் தென்னிந்தியாவிலும் அதேபோல் இரும்புக்காலத்திற்குமுன் வெண்கலக்காலம் இருந்திருக்கின்றது என்பதற்கான ஆதாரங்கள் இதுவரையிலும் கிடைக்கவில்லை. நீலகிரியின் வட்டக்கட்டிடங் களிலும் மண்குவியல்களிலும் வெண்கலமும் இரும்பும் சேர்ந்தாற் போல் இருப்பதானது அவைகளின் காலத்தைப்பற்றி தெளிவாகத் தீர்மானிக்க முடியாதபடி உள்ளது. சுமார் 300 அல்லது 400 ஆண்டு வயதானவையென்று கணக்கிடப்பட்ட பழங்காலத்திய மரங்கள் சில இவ்வட்டக்கட்டிடங்களுக்குள்ளும் மண்குவியல் களிலும் வளர்ந்திருக்கின்றன. காங்கிரீவ் (Congreve) குறிப் பிட்டுள்ள ஒருமரம் 27 அடி சுற்றளவுள்ளதாயிருந்தது. ஆனால் அம்மரங்களின் வேர்களுக்கிடையே இருந்த புதைக்குழிகளுக் குள்ளே காணப்பட்ட நினைவுப் பொருள்களின் தன்மையை நோக்குமிடத்து அப்பொருட்கள் உண்மையில் மிகப்பழைய காலத் தவை என்று சொல்லமுடியாது". இவ்வாறு நீலகிரி கெஜெட்டீர் கூறுகின்றது.[2]

பிரீக்சும் காங்கிரீவும் காணாத அநேக வட்டக்கட்டிடங் களும் மண்குவியல்களும் நீலகிரி மலைகளில் உள்ளன என்றும் இவை களில் பல இன்னும் யாராலும் தோண்டி எடுக்கப்படவில்லை யென்றும் சொல்லப்பட்டுள்ளது.[3] பேரகணியைச் சுற்றிலுமுள்ள மலைகளின் உச்சிகளில் குறைந்த பட்சம் 13 வட்டக்கட்டிடப் புதைக்குழிகள் இருக்கின்றனவென்றும் பிரீக்ஸ் இவைகளில் இரண் டைமட்டும் தோண்டியெடுத்துள்ளார் என்றும் நீலகிரி கெஜெட் டீரில் குறிக்கப்பட்டுள்ளது.[4]

3. ஆஜாரம் (Azaram) என்றழைக்கப்படும் புதைக்குழிகள்:-

இவைகளைப் பற்றி நீலகிரி கெஜெட்டீர் கூறுவதாவது:-
" இவைகள் கரடு முரடான கற்களைக் கொண்டு தரையில் ஒன்றை யடுத்து ஒன்ருக வட்டவடிவில் நடப்பட்ட கல்வட்டங்களாகும் (Stone circles). இவைகள் தற்காலத்தில் தொதவர்கள் தங்களுடைய ஈமச்சடங்குகளின் போது நினைவுப்பொருட்களைப் புதைக்கும குழிகளை ஒத்திருக்கின்றன. இவைகளில் அதிகமான அடுப்புக் கரிகளும் எலும்புகளும் சில பித்தளை புஜக்காப்புகளும் (Brass-bracelets), சில இரும்பு ஈட்டித்தலைகளும், உளிகளும் வைக்கப்பட்டிருந்ததை பிரீக்ஸ் கண்டெடுத்தார். இவைகளில் காணப்பட்ட இரும்பாலான ஈட்டித்தலைகளும், உளிகளும் மேலே சொன்ன வட்டக்கட்டிடங்களிலும் மண்குவியல்களிலும் காணப்பட்டவைகளைக் காட்டிலும் சிறிதளவே துருபிடித்துள்ளன. மேலும் இவைகளின் வடிவங்களும் வேறுபாடுடையவைகளாகக் காணப்படுகின்றன." [5]

இன்றைய தொதவப் பெண்கள் தங்கள் புஜங்களில் பித்தளைக் காப்புகள் (Brass armlets) அணிகிருர்கள் என்றும் ஆனல் எந்த வட்டக்கட்டிடப் புதைக்குழியிலும் பித்தளைக் காணப்படவில்லையென்றும், ஆஜாரம் என்றழைக்கப்படும் புதைக்குழிகளை தொதவர்கள் நிர்மாணித்துள்ளார்களென்று ஊகிக்க இடமுணடு எனறும் W. பிரான்சிஸ் கூறுகின்ருர். [6] பிரீக்ஸ் இவைகளில் சில வற்றைத் தோண்டியெடுத்தார் என்றும் அவர் சீகூர் மலைக்குக் கிழக்கே உள்ள குன்றின்மேல் இத்தகைய சுமார் 30 புதைக்குழிகள் இருப்பதாகக் குறித்துள்ளார் என்றும் அவைகளை மிகக்கவனமாக ஆராயவேண்டுமென அவர் கூறியுள்ளார் என்றும் W. பிரான்சிஸ் மேலும் கூறுகின்ருர். [7]

4. கிஸ்ட்வேன்கள் (Kistvaens):-

இவைகள் பலகைப் போன்ற நான்கு கற்களை நான்கு பக்க சுவர்களாக நட்டு மேலே மூடப்பட்ட பெட்டிகளைப் போன்ற அமைப்புகளாகும். கிழக்குபக்கமாக உள்ள சுவர்கல்லில் சுமார் ஒரு அடி விட்டமுள்ள வட்டமான துளை காணப்படுகின்றது. ஒரே மாதிரியாக உள்ள இப்புதைக்குழிகள் நீலகிரி மலைகளில் ஒரே இடத்தில் மாத்திரம்—அதாவது கோணக்கேரி கிராமத்தில் பாழடைந்து கிடக்கும் உதயராயக் கோட்டைக்கருகில் உள்ளன என்றும், பட

கர்களிடையே இவைகளைப் பற்றி எவ்விதமான மரபுரையும் இல்லை யென்றும் அவர்கள் இவைகளை 'மோரியரு மனை' (அதாவது மோரியர் வீடு) என்ற அர்த்தமற்ற பெயரைக்கொண்டு அழைப் பதனுல் இப்புதைக்குழிகளுக்கும் இக்கோட்டைக்கும் சம்பந்தமிருப் பதாகத் தெரியவில்லை என்றும் நீலகிரி கெஜெட்டீர் சொல்லு கின்றது.[8] இவைகள் சாதாரணமாக $2\frac{1}{2}$ அடி அகலமும் $3\frac{1}{2}$ அடி நீளமும் உடையவையென்றும், இவைகளைச்சுற்றி நடப்பட்டுள்ள கல்வட்டங்களின் விட்டம் (Diameter) சாதாரணமாக 18 அடி யென்றும், இவைகள் தென்னிந்தியாவின் இதர பாகங்களில் காணப்படுகின்ற இதே போன்ற ஆயிரக்கணக்கான அமைப்புகளி லிருந்து மாறுபட்டவையாகத் தெரிவதில்லையென்றும் சொல்லப் பட்டுள்ளது.[9] வட்டக்கட்டிடங்களைப் போலவும், மண்குவியல் களைப் போலவும், கல்வட்டங்களைப் போலவும் இவைகளும் புதைக் குமிடங்கள்தான் (Burial places) என்று நீலகிரி கெஜெட்டீர் சொல்லுகின்றது.[10] பிரீக்ஸ் தோண்டியெடுத்த ஒன்றில் ஒரு உடைந்துபோன கோடாறியும், மிகவும் பழபழப்பாக மெருகிடப் பட்ட தடிப்பான மண்பாண்டத்தின் பாகங்களும காணப் பட்டன.[11] இவைகள் வட்டக்கட்டிடங்களில் காணப்பட்டவை களிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றன என்று சொல்லப்படு கின்றது.[12]

மாயார் பள்ளத்தாக்கில் இத்தகையவைகள் நூற்றுக் கணக்காக உள்ளன என்றும், அங்கே சில இடங்களில் இவை ஒரே இடத்தில் பத்து பன்னிரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் பரவியுள்ளன வென்றும், இவைகள் பொதுவாக வட்டவடிவமான மண்மேடுக ளால் (Tumuli) சூழப்பட்டுள்ளன என்றும் நீலகிரி கெஜெட்டீர் கூறுகின்றது.[13]

J. W. பிரீக்ஸ் 1871-72 ஆம் ஆண்டுகளில் (அதாவது இன்றைக்கு 109 வருஷங்களுக்கு முன்னுல்) நீலகிரி மலைகளில உள்ள சில வட்டக்கட்டிடங்களிலிருந்தும், மண்குவியல்களிலிருந் தும் தோண்டியெடுத்த பொருட்களின் விபரங்களைக் கொடுத்துள ளார். அவர் மொத்தம் 47 புதைக்குழிகளைத் தோண்டியெடுத் தார்.[14] அதற்குமுன் 1826-ல் ரெவரண்டு ஜேம்ஸ் ஹோக் (Rev. James Hough) என்பவர் சில வட்டக்கட்டிடங்களும் மண் குவியல்களும் தோண்டியெடுக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.[15]

1832-ல் கேப்டன் ஹார்க்னஸ் (Captain Harkness) என்பவர் நீலகிரி மலைகளில் பல புதைக்குழிகள் தோண்டியெடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.[16] 1847-ல் கேப்டன் காங்கிரீவ் (Captain Congreve) என்பவர் 46 புதைக்குழிகளைத் தோண்டியெடுத்தார்.[17] கேப்டன் காங்கிரீவும் பிரீக்சும் தோண்டிய புதைக்குழிகளில் காணப்பட்ட பொருட்களும் அவைகளின் தன்மையும் ஒரே மாதிரியானவைதான். ஆகவே பிரீக்ஸ் தோண்டியெடுத்த சில புதைக்குழிகளில் காணப்பட்ட பொருட்களை உதாரணத்திற்காக இங்கே பார்ப்போம்.[18]

1. தொதநாடு கம்பட்டியில் ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து இரும்பினுல் செய்யப்பட்ட 6 ஈட்டித்தலைகள் (Spear-heads) எடுக்கப்பட்டன.

2 மேற்குநாடு அதிகாரிஹட்டியில் ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து சண்டைக்கத்தியின் துண்டுகளும் (Pieces of swords), குத்து வாள்களின் துண்டுகளும் (Pieces of daggers), மங்கிய சிவப்பு நிறமுள்ள மணிக்கல் மாலையும் (Cornelian bead) எடுக்கப்பட்டன.

3 மேற்குநாடு இத்தலாரில் ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து மிருகங்களின் (முக்கியமாக எருமைகளின்) அங்கங்கள் எடுக்கப்பட்டன.

4 மேற்குநாடு நிடிக்காடு என்னுமிடத்திலுள்ள ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து அழகாகச் செய்யப்பட்ட ஒரு மண்பானை எடுக்கப்பட்டது; அதன் ஒரு பக்கத்தில் ஒரு சிறிய பானை ஒட்டிக்கொண்டிருந்தது (Pot with a spout).

5. மேற்குநாடு எப்கோடு (Ebgodu) என்னுமிடத்தில் ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து ஒரு பீடமும் (A pedestal), எரிக்கப்பட்ட மனித எலும்புகளையும் சாம்பலையும் கொண்ட அஸ்தி பானையும் (Urn), தாங்கியின் மேல் வைக்கப்பட்டுள்ள ஒரு சிறிய வெண்கலப் பூச்சட்டியும் (Small bronze vase on stand) எடுக்கப்பட்டன; இப்பூச்சட்டி அழகாகச் செய்யப்பட்டதாகவும் ஒரு மையத்தைச்சுற்றி சில வட்டங்களாகக் கோடுகள் வரையப்பட்டதாகவும் உள்ளது.

இன்னென்றில் பெரிய உருண்டை வடிவமான வெண் கலப்பூச்சட்டி இருந்தது. இது நீளவரிப்பள்ளமிடப்பட்ட வேலைப் பாடுடையதாகவும் நடுவில் பள்ளமிட்ட (Chased) கோடுகளா லான அழகிய வேலைப்பாடுகளுடையதாகவும் இருந்தது. (எடுக்கப பட்ட நாள் 13-10-1871)

6. தொதநாடு சீகூர் பாதையருகில் கல்வட்டங்களிலி ருந்து எலும்புத்துண்டுகளும், அடுப்புக்கரிகளும், சிறிதளவு டின் கலந்த தாமிர உலோகத்துண்டுகளும் எடுக்கப்பட்டன.

7. தொதநாடு தூனேரி அருகில் சிக்கேத்தனவ்வெ பெட்டா (Chiketnavoibetta)[19] என்ற குன்றில் ஒரு வட்டக்கட் டிடப் புதைக்குழியிலிருந்து 25-8-1871-ல் எடுககப்பட்டவை:-

நீள்வட்டவடிவமான வெண்கல பூச்சட்டி; அதன் வாய் நீள்வரிப்பள்ளக் கோடுடையது; சுற்றிலும் பள்ளமிட்ட (Chased) கோடுகளால் மிக அழகான வேலைப்பாடுகளையுடையது; உள்ளே பள்ளமான கோடுகளாலான தாமரைப்பூவின் சித்திரம் உள்ளது. இப்பூச்சட்டி மிகக்கனமானது; ஒரு தாங்கியின் மேல் வைக்கப்பட் டிருந்தது. பூச்சட்டியின் உள்ளே அடித்தளத்தில் செய்யப்பட் டுள்ள வேலைப்பாடு '**பத்ம**' அல்லது தாமரைப்பூ சித்திரம். இதன் அழகிய வேலைப்பாடுகள் கையினுலே பள்ளமிட்டு செய்யப்பட் டவை சில சிறிய ஒழுங்கீனங்கள் காணப்பட்ட போதிலும் வேலைப் பாடு மிகப்பிரமாதமாக உள்ளது (The workmanship is excellent) என்று பிரீக்ஸ் குறிப்பிட்டுள்ளார்.[20]

இன்னென்று தாங்கியில்லாத உருண்டையான வெண் கலப் பூச்சட்டி; வாய் அகலமானது; இப்போது ஹிந்துக்கள் உப யோகிக்கின்ற பூஜைப்பாத்திரத்தை ஒத்திருக்கிறதென்று கூறு கிருர் பிரீக்ஸ்.[21]

இவை மட்டுமன்றி நல்ல வடிவமாகச் செய்யப்பட்ட ஈட்டித்தலையும், கொண்டை வடிவமான நுனியையுடைய நீண்ட பிடியுள்ள அரிவாளும் (Sickle with long handle ending in a knob) 2 க்ஷவரக்கத்திகளும், அலங்கரிக்கப்பட்ட பல்வேறு வகையான மட்பாண்டங்களின் துண்டுகளும், மிருகங்களின் பாகங்களும், ஒரு சிறிய அரிவாளும் (Sickle) எடுக்கப்பட்டன.

8. தொதநாடு தூனேரியில் குன்ஹக்கில பெட்டா[22] என்ற குன்றிலுள்ள ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழி 1-9-1871ல் தோண்டப்பட்டது. இவவட்டக்கட்டிடப் புதைக்குழியின் நடுவே பாதிபாகம் பட்டுப்போன ஒருமரம் இருந்ததென்றும் அதன் சுற்றளவு தரைமட்டத்திலிருந்து மூன்று அடி உயரத்தில் 9 அடி 2 அங்குலம் இருந்ததென்றும் அடிமரத்திற்கு கீழே வேர்களுக்கிடையில் பலகை போன்று இரண்டு நீண்ட கற்கள் மரத்தின் இரு பக்கங்களில் வடகிழக்கு—தென்மேற்குத் திசையில் வெளியே நீண்டு கொணடிருந்தனவென்றும் பிரீக்ஸ் குறிப்பிட்டுள்ளார். நீலகிரியில் சோலைமரங்கள் வளருவதற்கு வெகுகாலம் பிடிக்கின்ற காரணத்தால் இந்த மரம் மிக பழங்காலத்ததாக இருக்க வேண்டுமென்றும் அவர் சொல்லுகின்றார்.[23]

9. தொதநாடு குளிசோலை பெட்டாவில் உள்ள ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து 25-8-1871-ல் எடுக்கப் பட்டவை:-

மண்ணினாலான மூன்று மனித உருவங்கள்; ஒன்றின் தலைப்பாகைக் கூம்பு வடிவுள்ளதாகவும (Conical) — அதாவது தலைப்பக்கம் அகலமாகவும் மேலே போகப்போக குறுகி கூர்மையான நுனியுடையதாகவும்—மற்றொன்றின தலைப்பாகை சமசதுர வடிவமாகவும் உள்ளது. மூன்றாவது உருவம் மூக்கு மிகப்பெரியதாக உள்ள ஒரு பெண்ணின உருவம்.

இவைமட்டுமின்றி மிருகங்களின் உருவங்களும், கோடாறி கேடயம் ஆகியவைகளின் துண்டுகளும், ஆண் பெண் உருவங்கள் இரண்டும் எடுக்கப்பட்டன. ஒரு உருவத்திற்குத் தலைப்பாகை உண்டு

10 தொதநாடு — குளிசோலை பெட்டாவிலுள்ள மற்றொரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து 25–8-1871-ல் எடுக்கப்பட்டவை:-

அழகாகச் செய்யப்பட்ட ஒரு வெண்கல விளக்கும் அத்துடன் காணப்பட்ட சங்கிலித் துண்டுகளும் (Fragments of chain) இரும்பினால் செய்யப்பட்ட ஒரு அரிவாளும் (Sickle),[24] சமசதுரமான ஒரு இரும்பு விளக்கும் அத்துடன் காணப்பட்ட சங்கிலித் துண்டுகளும்

11. தொதநாடு — கெந்தொரைக்கருகிலுள்ள எரிசி பெட்டாவில் ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து 4-11-1871-ல் எடுக்கப்பட்டவை:-

(அ) தாங்கியில்லாத பெரிய வெண்கலத்தட்டம் (Bronze-basin); அது முழுவதும் பளபளக்கும் பச்சை நிறத்துருப்பிடித்துள்ளது, அடித்தளத்தில் மையத்தைச் சுற்றி வட்டமான கோடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சிறிய குவியாழமற்ற தட்டம் (Saucer); அடித்தளத்தில் மையத்தைச்சுற்றி வட்டமான கோடுகள் உள்ளன.

(இ) உடைந்து போன சிறிய இரும்புக் கருவிகள்.

(ஈ) அஸ்திச்சட்டி (Urn); இது மிக அருமையான தொரு மண் பாண்டம்

(உ) தாங்கியின் மேல் வைக்கபட்டுள்ள வெண்கல பூச்சட்டி (Bronze vase); வாயகலமானது: மையத்தைச்சுற்றி ஒன்றிரண்டு வட்டமான கோடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது [25]

(ஊ) அதிகத் துருப்பிடித்த ஒரு பெரிய இரும்பு வெட்டுக் கத்தியும் (Large iron knife), ஈட்டித்தலையும் (Spear-head).

(எ) தாங்கியில்லாத குவியாழமற்ற வெண்கலத் தட்டம் (Bronze saucer) பளபளப்பான பச்சை நிறத் துருப்பிடித்துள்ளது· அதனுள் மண்ணும் எலும்பும் இருந்தன. இத்துடன் இரும்பாலான ஒரு ஈட்டித்தலையும் காணப்பட்டது.

(ஏ) முறிந்துபோன அரிவாளின் துண்டும் வெட்டுக்கத்தியின் துண்டும்.

(ஐ) அஸ்தி பானை (Urn);

(ஒ) இரும்பு மணி (Iron bell); அதன நாக்கு காணப்படவில்லை.

(ஓ) ஈட்டித்தலை; அடியில் சமசதுரமாயுள்ளது.

12. தொதநாடு—சோலூர் அருகே உள்ள ஒரு வட்டக்கட்டிடப்புதைக்குழியிலிருந்து 12-1-1872-ல் எடுக்கப்பட்டவை :-

(அ) இரும்பு க்ஷவரக்கத்தியும், அரிவாளும் (Iron razor and sickle).

(ஆ) உடைந்து போன ஒரு இரும்புக்கருவி (Iron implement); தட்டையாகவும் இருபக்கங்களில் அகலமாகவும் உள்ளது.

(இ) அதே போன்று உடைந்துபோன இன்னொரு இரும்புக்

கருவி.

(ஈ) வெண்கலத் தட்டம்; அதிகத் துருப்பிடித்தும் உடைந்தும் உள்ளது.

(உ) துருப்பிடித்த வெண்கலத் துண்டுகளுடன் கூடிய மண்.

(ஊ) ஆணி போன்ற ஒரு இரும்பு; அதனுள்ளே குழாய் போன்று நெடுக துளை செய்யப்பட்டுள்ளது; இது எழுத்தாணியாக இருக்கலாம் (Iron style).

(எ) உடைந்துபோன அஸ்திச்சட்டி; இது ஒரு சாதாரணமான மண்பானை இன்னொரு அஸ்திச்சட்டி; அதுவும் நல்ல மட்பாண்டம் என்று சொல்லுவதற்கில்லை.

(ஏ) இரும்பு க்ஷவரக்கத்தியும் எழுத்தாணி போன்ற ஒரு இரும்புத் துண்டும்.

13. தொதநாடு—சோலூர் அருகில் கார்நாடு மந்துக்கு வடக்கிலுள்ள வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து 18–1–1872ல் எடுக்கப்பட்டவை:-

(அ) சிறிய அஸ்திச் சட்டியும் கரடு முரடான ஒரு சட்டியும்;

(ஆ) இரும்பாலான மணியும் (Iron bell), இரண்டு ஈட்டித் தலைகளும்.

(இ) மண்ணும் கருகிய எலும்பும்.

(ஈ) இக்காலத்திய அம்புகளின் தலையைப் போன்ற ஒரு இரும்புத்துண்டு; உள்ளே குழாயைப் போன்ற நீண்ட துளை இருக்கின்றது; ஒரு பக்கம் கூர்மையாக உள்ளது.

(உ) துண்டு துண்டாக உள்ள இரும்பு மணியும் சங்கிலியும்.

(ஊ) க்ஷவரக்கத்தி, அரிவாள் ஆகியவைகளின் துண்டுகள்.

(எ) ஈட்டியின் பிடிபோல் தெரிகின்ற ஒரு இரும்புத்துண்டும் இரண்டு ஈட்டித் தலைகளும்.

(ஏ) நீரில் கரையாததும் பலமாக ஒட்டக்கூடியதுமான ஒரு வெண்மையான பொருள்; இது ஒரு வேளை மரப்பிசின் (Resin) வகையாக இருக்கக்கூடும்.

(ஐ) வாயகலமான இரும்பு க்ஷவரக்கத்தி அல்லது வெட்டுக் கத்தி.

(ஒ) இரும்பாலான ஈட்டித்தலை.

(ஓ) கருவிகளைக் கூர்மையாகத் தீட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒருவகை ரத்தினக்கல் (Agate), அல்லது வண்ணப்

பட்டைகளிடப்பட்ட கல்.

14. தொதநாடு—தார்நாடு மந்துக்கும் சோலூருக்கும் இடையே உள்ள ஒரு குன்றின் மேல் ஒரு வட்டக்கட்டிடப் புதைக் குழியிலிருந்து 19-1-1872-ல் எடுக்கப்பட்டவை:-

(அ) அஸ்திச்சட்டி; இக்காலத்துச் சட்டியின் வடிவத்தை ஒத்துள்ளது; அவ்வளவு நல்ல மட்பாண்டமல்ல. அதனுள் வெந்த எலும்புத்துண்டுகளும் மண்டை ஓட்டின் இரு துண்டுகளைக் கொண்ட ஒரு சிறிய சட்டியும் இருந்தன.

(ஆ) பல மணி மாலைகள்; அவையெல்லாம் முக்கியமாக சாதாரண கண்ணாடி போன்ற கல்லினால் செய்யப்பட்டவை ஆனால் ஒன்றிரண்டு வெள்ளை ரத்தினக் கற்களால் (White agate) செய்யப்பட்டவை. இவைகளில் இரண்டு பொத்தான் வடிவமானவை (Button-shaped); அவைகளுக்குள்ளே கருப்பு வண்ணம் தெரிகின்றது.

15 தொதநாடு—கொடநாடு[26] ஊருக்கு வடக்கே உள்ள கோணபெட்டா என்ற குன்றின் மேலுள்ள ஒரு வட்டக் கட்டிடப் புதைக்குழியிலிருந்து 24-1-1872-ல் எடுக்கப்பட்டவை:-

(அ) இக்காலத்திய சட்டியைப் போன்ற அஸ்திச்சட்டி; அவ்வளவு நல்ல மட்பாண்டமல்ல; அது நிறையப் பெரிய எலும்புத் துண்டுகள் இருந்தன; இதர பொருட்களுடன் மனிதத் தாடை எலும்பும் (Jaw) இருந்தது.

(ஆ) இரும்பினாலான சிறிய ஈட்டித்தலை.

(இ) உருண்டை வடிவமான ஒரு பெரிய வெண்கல பூச்சட்டி தாங்கியின் மேல் வைக்கப்பட்டிருந்தது; ஆனால் அது துருப்பிடித்து உடைந்திருந்தது.

(ஈ) ஒரு ஜோடி பெரிய கத்திரிகள் (Shears)

(உ) நீண்டு நேராக உள்ள இரும்புத்துண்டு; இது ஒரு உளியாக இருக்கலாம்.

(ஊ) இரும்புக்கம்பி அல்லது கொக்கியின் (Hook) துண்டுகள்.

(எ) மூடியுடன் கூடிய ஒரு பானை; மூடியின்மேல் ஒரு மனிதன் நீண்ட ஒரு ஆசனத்தின் மேல் (Sofa) உட்கார்ந்து கொண்டிருப்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மூடியுடன் கூடிய பானை; இம்மூடியின் மேல் அழகற்றதாகக் காணப்படும் ஒரு மனிதத்தலை பொறிக்கப்பட்டுள்ளது. இத்

தலையானது பின்னுக்கு மிகவும் சரிந்த நெற்றியையும் (Retreating forehead) பெரிய காதுகளையும் உடையது. இன்னொரு மனித உருவத்தின் தலை கூம்பு வடிவமாக (Conical), அதாவது மேலே போகப்போக குறுகி கூர்மையாக உள்ளது; அவன் கையில் கேடயம் (Shield) பிடித்துள்ளான்.

(ஐ) இரும்பு க்ஷவரக்கத்தி.

(ஒ) பானையும் எருமையின் உருவம் பொறிக்கப்பட்ட மூடியும்; இந்த எருமை உருவம் சாதாரண எருமைகளைக் காட்டிலும் வேறுபட்டதாகத் தெரிகின்றது.

(16) **பிளிக்கல்**[27] மலைக்குத் தெற்கே உள்ள ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து 26–1-1872-ல் எடுக்கப்பட்டவை

(அ) அஸ்திச்சட்டியின் உடைந்த பாகங்கள்; இந்த மட்பாண்டம் அழகானது (Fine pottery); இதில் எலும்புகள் இருந்தன.

(ஆ) உள்ளே கூம்பு உள்ளதும் கருப்பு நிறமானதும் வாய் அகலமானதுமான வெண்கலப் பாத்திரம (Basin).

(இ) இரண்டு மோதிரங்கள்—ஒன்று தங்கத்தினால் செய்யப்பட்டது; மெல்லியதாகவும் வேலைப்பாடு செய்யப்பட்டதாகவும் உள்ளது (Plain), மற்றது வெண்கலத்தால் செய்யப்பட்டது.

(ஈ) படிகக்கல் அல்லது மெருகு (Pumice) துண்டு; ஒரு தட்டத்தில் (Saucer) ஊற்றி கட்டியாக்கி எடுக்கப்பட்டதைப் போல் அச்சு தெரிகின்றது.

(உ) கூரிய முனையுள்ள இரும்புத் துண்டும் மை தீட்டும் கோலும்.

(ஊ) அஸ்திபானை; இது ஒரு அழகான மண்பாண்டம்; அதனுள் ஒரு வெண்கலப் பாத்திரம்; அது உள்ளே அடித்தளத்தில் கூம்பு உள்ளதாயிருந்தது

(எ) ஒருவித மெருகு (Punice); அது முட்டை வடிவத்தின் ஒரு பாகமாக இருந்தது.

(ஏ) வெண்கல உருளை (Bronze cylinder); மேல்பக்கம் திறந்துள்ளது; அடித்தளம தட்டையாக உள்ளது; நடுவில் வளையல்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

(ஐ) க்ஷவரக்கத்தி

(ஓ) சிறிய அஸ்தி பானை; இது ஒரு சாதாரண மட்பாண்டம்.

(ஓ) வெண்கலப் பாத்திரம்; அடித்தளம் துருப்பிடித்து ஒட்டையாகியுள்ளது.

(ஔ) சிறிய வெண்கலப் பாத்திரம்; நிறம் கருப்பாயுள்ளது.

17. தொதநாடு—பிளிக்கல் மலையின் தென் சரிவிலுள்ள ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து 27-1-1872-ல் எடுக்கப் பட்டவை:-

(அ) அஸ்தி பானையின் மூடி; இது மிகவும் அழகான மண் பாண்டம்; இதனுள் எலும்புகளும், இரும்பு, வெண்கலம் ஆகியவை களின் துண்டுகளும்; வெண்கல மோதிரமும் காணப்பட்டன.

(ஆ) இரும்பு அரிவாள், க்ஷவரக்கத்தி ஆகியவைகளின் பெரிய துண்டுகள்; இவை அதிகமாகத் துருப்பிடித்து முறிந்திருந்தன.

(இ) சட்டி போன்ற வடிவமுள்ள அஸ்தி பானை; அதனுள் எலும்புகளும் வெண்கல மோதிரமும், மை தீட்டும் கோலின் துண்டுகளும், தங்க மணிகளாலான இரண்டு மாலைகளும் (Gold beads), ஒரு தங்கப் பொத்தானும் (Gold button), மணிக்கற்க ளாலான இரண்டு மாலைகளும் — ஒன்று யாதொரு வேலைப் பாடும் இல்லாததும் இன்னொன்று வளையல் போன்ற வேலைப்பாடு டையது —மான இரண்டு தங்கக்காதணிகளும் (Gold-ear rings), வெண்கலத்தினுலான ஆணி அல்லது குண்டூசி போன்றவைகளின் பல முறிந்த பாகங்களும் காணப்பட்டன.

18. தொதநாடு—பிளிக்கல் மலையின் உச்சியருகே உள்ள ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருநது 27-1-1872-ல் எடுக்கப் பட்டவை:-

(அ) உள்ளே அடித்தளத்தில் கூம்புள்ள ஒரு வெண்கலப் பாத்திரம்; அதனுள் மோட்டாவான பருத்தித் துணியின் பாகங் கள் (Fragments of coarse cotton cloth) இருந்தன. துணியின் சில துண்டுகள் அப்பாத்திரத்தின் பக்கங்களில் ஒட்டிக் கொண்டி ருந்தன. அவைகளை எடுக்கும் போது துருபிடித்துள்ள அப்பாத் திரத்தில் அவைகளின் அச்சு காணப்பட்டது. அப்பாத்திரத்தினுள் மை தீட்டும் கோல் போன்று காணப்படும் வெண்கலக் கம்பியும், இரும்புத் துண்டும், தங்கக் காதணியின் (Gold ring) பாகங்களும், தடியின் நுனிக்கோ அல்லது ஆயுதங்களின் பிடிகளுக்கோ போடப் படும் காப்புகளும் (Ferule or cap of some staff or weapon) காணப்

பட்டன.

(ஆ) இக்காலத்துச் சட்டியைப் போன்ற அஸ்தி பானை; ஆனால் உருண்டையான பெரிய மூடியுடன் கூடியது. அதனுள் வேலைப்பாடு ஒன்றும் செய்யப்படாத சிறிய தடிப்பமுள்ள வெண் கலப்பாத்திரமும், அழகாகச் செய்யப்பட்ட ஒரு வெண்கல மோதிரமும், இரண்டு மெல்லிய தங்கக் காதணிகளும் (Gold ear-rings), மெருகும் இருந்தன.

(இ) அஸ்தி பானை; இது ஒரு அழகான மண்பாண்டம்; சிறிது தட்டையாக உள்ளது; அதனுள் எலும்புகளும் மனித மண்டை யோட்டின் இரு துண்டுகளும், வெளியில் மிகப் பச்சையாகத் துருப் பிடித்துள்ள வெண்கல ஏந்துத் *தட்டும் (Saucer), மை தீட்டும் கோல்களைப் போன்றவைகளும் அரச முத்திரையுள்ள வெண் கல மோதிரமும், தாலியைப் போன்ற தங்க நகைகளும் மெருகும் காணப்பட்டன.

(ஈ) சிறிய ஈட்டித்தலையும் முறிந்த க்ஷவரக்கத்தியும்.

19 தொதநாடு—நட்ட நேரி[28] மலையிலுள்ள ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து 27–1–1872ல் எடுக்கப்பட்டவை

(அ) தாங்கியில்லாத வெண்கலப் பூச்சட்டி (Bronze vase); உள்ளே நீள்வரிப் பள்ளமிட்ட அழகான வேலைப்பாடுகளைக் கொண்டது (Flutted with pretty pattern inside).

(ஆ) மிக அழகான இரண்டு தங்கக் காதணிகள் (Two very-protty gold ear-rings); காதணியின் வளையல் ஒருவகை புரிமுறுக் கேற்றப்பட்டதாக உள்ளது; அது கேடய வடிவமான ஒரு தங்கத் தகடுடன் ஒரு பக்கம் ஒட்டினாற் போல் உள்ளது. அத்தங்கத் தகட்டின் மேல் மூன்று வரிசைகளில் சிறு சிறு உருண்டைகள் (Small balls) காணப்படுகின்றன.

20. பேரங்கநாடு—நிடுகுளா அருகிலுள்ள ஒரு வட்டக் கட்டிடப் புதைக்குழியிலிருந்து 24–4–1872 ல் எடுக்கப்பட்டவை:-

(அ) தட்டையான மூடியுள்ள ஒரு சிறிய அஸ்தி பானை; இது மிக அழகான மண்பாண்டம்.

(ஆ) உடைந்து போனதும் வாய் அகலமானதுமான ஒரு வெண்கலப் பாத்திரம்.

(இ) க்ஷவரக் கத்தியும், பெரிய வெட்டுக் கத்தியும் ஈட்டித் தலையும்.

(ஈ) மூன்று எழுத்தாணிகளும் இரண்டு ஈட்டித் தலைகளும் மெருகு வகையும்

(உ) மை தீட்டும் சிறிய இரும்புக் கோல்.

(ஊ) ஏதோ ஒரு கொம்பின் துண்டு அல்லது எலும்பினால் செய்யப்பட்ட ஒரு கருவி.

(எ) பானையின் மூடி; அதில் மை தீட்டும் முறிந்த கம்பி உள்ளது.

(ஏ) வெட்டுக்கத்தி அல்லது அரிவாள்.

(ஐ) ஈட்டித்தலைகளும் க்ஷவரக்கத்திகளும்.

(ஒ) இரும்பு உளியும் எழுத்தாணியும் (Style).

(ஓ) பானையின மூடியைப் போன்ற வாயகலமான சட்டி[29], இது மிக அழகான மணபாண்டம்; இதில் மண்ணும் ஒரு சிறு எலும்புமம இருந்தன.

(ஔ) கரடு முரடான நீண்ட பானையின் உடைந்த பாகங்கள்; இவைகளில் சிறிய மிருகங்கள், பறவைகள் ஆகியவைகளின எலும்புக் கூடுகள் இருந்தன.

21. பேரங்கநாடு—கீழ்க் கோத்த கேரியிலுள்ள[30] ஏழு வட்டக்கட்டிட மலையிலுள்ள (Seven cairn hill) புதைக்குழிகளிலிருந்து எடுக்கப்பட்டவை.

(அ) சிறிய மட்பாண்டம்.

(ஆ) விளக்கு அல்லது தூபம் போடும் சாதனமும் ஒரு ஈட்டித்தலையும்.

(இ) மண்ணினால் செய்யப்பட்ட இரண்டு மணிகள் (Bells).

(ஈ) மிகப் பெரிய மான்கொம்பு போன்றதொன்று.

(உ) பெரிய ஒரு பறவையின் உடல்; அதற்குத் தலையில்லை.

(ஊ) கூம்புள்ள (Conical) உச்சியையுடைய ஒரு தூண்.

(எ) அதே போன்றதொரு தூண் அல்லது மரம்; இது தூணாகவோ அல்லது ஒரு மரத்தின் பாகமாகவோ இருக்கலாம்.

(ஏ) சிறிய அஸ்திச் சட்டி; இது ஒரு அழகிய மட்பாண்டம்; காக்காய்ப் பொன்னால் (Mica) மெருகிடப்பட்டதாகும்.

22. பேரங்கநாடு—கோடநாடு அருகிலுள்ள ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து 9-5-1872-ல் எடுக்கப்பட்டவை:

(அ) அஸ்திச் சட்டி; இது மிக அழகான மண்பாண்டம்; இதன் மூடி பானையின் விளிம்போடு கச்சிதமாக இணைந்துள்ளது. இம்

மூடியின் உச்சியில் ஒரு உருவம் பொறிக்கப் பட்டிருந்ததை போல் தெரிகின்றது.

(ஆ) இரும்பினுல் செய்யப்பட்ட இலேவடிவமான ஈட்டி அல்லது எறிவேல் (Spear or javelin).

23. பேரங்கநாடு — பங்கண்ணி [31] அருகிலுள்ள ஒரு வட்டக்கட்டிடப் புதைக்குழியிலிருந்து எடுக்கப்பட்டவை:-

(அ) அருமையான அஸ்திச் சட்டி; பெரியதாகவும் பல கோடுகளால் அலங்கரிக்கப்பட்டதாகவும் இருக்கின்றது; காக்காய்ப் பொன்னுல மெருகிடப்பட்டுள்ளது.

(ஆ) க்ஷவரக்கத்தியும் சிறிய அரிவாளும்.

(இ) முறிந்துபோன உளி (Broken chisel).

(ஈ) மூக்கில் அணிவதற்கான சிறிய இரும்பு அணிகலன்.

(உ) இன்னெரு அஸ்தி பானே; அதன் வாய்ப் பக்கம் உள்ளே நீட்டிக் கொண்டிருக்கும்படிச் செய்யப்பட்டுள்ளது; இது நடுத்தரமான ஒரு மட்பாண்டம்.

(ஊ) நீண்ட பிடியுடன் கூடிய அரிவாள்.

(எ) சிறிய அஸ்தி பானே; அதன் மூடி அதன் வாயுடன் நன்கு பொருநதியிருந்தது. அது நன்ருகச் செய்யப்பட்டும் அலங்கரிக்கப்பட்டும் இருந்தது; மூடியானது உச்சியின் பக்கம் கூம்பு வடிவுடையதாயிருந்தது. இம்மட்பாண்டம் நன்ருகவும் மெருகிடப்பட்டதாகவும் இருந்தது.

(ஏ) மரப்பிசின் வகை.

24. பேரங்கநாடு—கோடநாடு அருகே உள்ள வட்டக் கட்டிடப் புதைக்குழியிலிருந்து 9 5–1872-ல் எடுக்கப்பட்டவை:-

(அ) சிறிய ஆண் பெண் உருவங்களின் உடைந்த பாகங்கள்; உருவங்கள் தோற்றமழிந்தவைகளாகக் காணப்படுகின்றன (Defaced). இவைகளில் ஒன்று, இரண்டுதலே ராக்ஷசன்; சில ஆண் உருவங்களின் தலைகள் பெரிதாகவும் முகங்கள் மடமையைக் காட்டுவனவாகவும் உள்ளன (Idiotic faces).

(ஆ) க்ஷவரக்கத்தி, அழகான வடிவில் செய்யப்பட்ட நீண்ட ஈட்டித்தலே, வெட்டுக்கத்தி ஆகியவைகள்.

(இ) உருவங்களின் உடைந்த பாகங்கள்; அவைகளில் ஒன்று பாம்பு; மற்றொன்று உட்கார்ந்துள்ள உருவம். ஒரு மனிதன் தலே

யில்லாத ஒரு மிருகத்தின் மேல் ஏறிக் கொண்டிருக்கின்றுன்; எல்லாம் சிறிய உருவங்கள்; தோற்றமழிந்து காணப்படுகின்றன (Defaced).

(ஈ) ஆரஞ்சு பழத்தோல் (Orange peel).

(உ) தட்டையான மட்பாண்ட மூடி; இது ஒரு நல்ல மண் பாண்டம்.

(ஊ) மிக அழகான அஸ்தி பானை (Fine urn); மிக நல்ல மண்பாண்டம்; காக்காய்ப் பொன்னுல் மெருகிடப்பட்டது.

(எ) நீண்ட நாக்குடைய வெட்டுக்கத்தி; இது மரக் கைப் பிடியினுள் சொருகியிருந்த தென்பதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

(ஏ) எலும்புள்ள அஸ்தி பானை; அழகாகச் செய்யப்பட்டுள்ளது; மிக அழகிய மட்பாண்ட வகையைச் சேர்ந்தது (of the finest pottery); காக்காய்ப் பொன்னுல் மெருகிடப்பட்டது ஆனுல் சாதாரண பானையின் வடிவத்தையுடையது. மூடியின் மேல் ஒரு பறவையின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது,

(ஐ) தங்கக் கம்பியினுல் செய்யப்பட்ட சிறிய மூக்குத்தி (Small nose-jewel of gold wire); இது ஒரு சிறிய திராக்ஷைக் குலைபோல் உள்ளது.

(ஒ) மிக அழகான வடிவமுள்ள குவியாழமற்ற சிறிய வெண் கலத் தட்டம் (Basin); வாய்ப்பக்கம் வெளியே பல பள்ளக் கோடுகளால் அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ளது.

(ஓ) வெண்கலத்தால் செய்யப்பட்ட இன்னெரு குவியாழமற்ற தட்டம்

25. தொதநாடு—பில்லிக்கம்பை (Billikambe)யிலுள்ள ஒரு மண் குவியலிருந்து 15-9-1871 லும் 16-9-1871 லும் எடுக்கப்பட்டவை:-

(அ) உருண்டை வடிவமாகவும் வாய் அகலமாகவுமுள்ள பெரிய அஸ்திச் சட்டி; மிக அழகாக உள்ளது

(ஆ) வாய்ப்பக்கம் நீள்வரிப் பள்ளக் கோடுடைய குவியாழமற்ற வெண்கலத் தட்டம்; உள்ளே அடிதளத்தின் மையத்தில் கூம்புள்ளது.

(இ) மண் நிறப்பப்பட்ட வெண்கலப் பாத்திரம்.

(ஈ) சிப்பு, படிகங்கள் (crystals), எலும்புகள், தங்க நகைகள் ஆகியவைகளைக் கொண்ட வெண்கலப் பாத்திரம்.

(உ) அழகாகச் செய்யப்பட்ட ஒரு சிறிய வெண்கலப் பாத்திரம்.[32]

(ஊ) மண்ணும் எலும்புகளும் கொண்ட வெண்கலப் பாத்திரம்

(எ) மை தீட்டும் இரும்புக் கோலும் மங்கிய சிவப்பு நிற மணிகளாலான இரண்டு மாலைகளும் (Two cornelian beads).

(ஏ) பச்சைக் கண்ணாடிக்கல் மணிகளாலும் தங்க மணிகளாலும் ஆகிய மாலைகள் (Green glass and gold beads).

(ஐ) அஸ்திச் சட்டிகளின் மூடிகள்; இவை மிக அழகான மண்பாண்டங்கள்

(ஒ) நடுவே துளையுள்ள உருண்டை வடிவமான ஒரு கல்; ஒருவேளை இது சம்மட்டியாக இருக்கலாம்.

(ஓ) குவியாழமற்ற வெண்கலத் தட்டமும் அஸ்திச் சட்டியைப் போன்ற வெண்கலப் பாத்திரமும்; பின்னதில் மண்ணும் ஒரு ஈட்டித் தலையும் இருந்தன.

(ஔ) மண்ணினாலான மனித உருவத்தின் பாகம்; அதன் தலை நீண்டும் பக்கங்கள் குறுகியும் உள்ளது; தலைப்பாகை இல்லை. மற்றொன்று வெண்கல உலோகத்துண்டு

26. தொதநாடு—தூனேரிக்கும் ஹெப்ப நாட்டுக்கும்[33] (Aebbanad) இடையே மெட்ஸ் பாதிரியினுடைய மாளிகையிலிருந்து 2 மைல் தூரத்திலுள்ள நெட்டிலு (Neddilu) என்ற பாழடைந்த ஊர்ப் பக்கம் ஒரு (Barrow) மண் குவியலிலிருந்து 23-10-1871-ல் எடுக்கப்பட்டவை:-

(அ) எழுத்தாணி போன்ற ஒரு இரும்புக்கோல்.

(ஆ) இரட்டைக் கொண்டைகளுள்ள கைப்பிடியையுடைய இரும்பு குத்துவாள் (Dagger); கைப்பிடியானது செம்பினால் செய்யப்பட்டது; மிகுதியான வேலைப்பாடுகளையுடையது (Dagger-with double guard; hilt of copper; very much carved).

(இ) அழகாக அலங்கரிக்கப்பட்ட அகலமான வெண்கல உளி

(ஈ) இரும்பினால் செய்யப்பட்ட ஐந்து ஈட்டித்தலைகள் (Spear heads).

(உ) இரும்புக்கருவிகளும் (Iron implements), அடுப்புக் கரியும், எலும்புகளும் மண்ணும்.

27. தொதநாடு—கம்பட்டியிலுள்ள மண் குவியலிலிருந்து 3-11-1871-ல் எடுக்கப்பட்டவை;-

(அ) மண்பானையும் அதன்மூடியும்; மூடியின்மேல் ஒரு பெண்

தனது தலையின்மேல் ஒரு சட்டியைச் சுமந்து கொண்டிருக்கும் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது: அவள் சிறிய பாவாடை அணிந்துள்ளாள்.

(ஆ) மூடியுடன் கூடிய மற்றொரு மண் பானை, மூடியில் சிறுத்தை போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

(இ) மூடியுடன் கூடிய இன்னொரு மண்பானை: ஒரு மனிதன் குதிரை மீது ஏறிக்கொண்டிருக்கும் உருவம் மூடியில் பொறிக்கப் பட்டுள்ளது. அம்மனிதனுடைய தலைப்பாகை உச்சியில் கூர்மை யானதாக உள்ளது (Conical); அவன் இடுப்பில் கட்டியுள்ள துணி யில் இரட்டைக் கொண்டைகளையுடைய கைப்பிடியைக்கொண்ட குத்துவாள் (Double guarded dagger) அல்லது உடைவாள் சொரு கப்பட்டுள்ளது. அவன் தனது வலது கையில் தோளோடு சாய்ந் தாற்போலுள்ள சண்டைக்கோடாரி (Battle axe) ஒன்றைப் பிடித் துள்ளான். இக்கோடாரியின் பிடியும் இரட்டைக் கொண்டைகளை யுடையதாக உள்ளது.

(ஈ) மண்பானையின் மூடி; அதில் மனித உருவம் பொறிக்கப் பட்டுள்ளது.

(உ) எருமை உருவம் பொறிக்கப்பட்ட இன்னொரு மண்பானை யின் மூடி; எருமையின் கழுத்தில் மணிக்கட்டப்பட்டுள்ளது.

(ஊ) குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் உருவம்.

(எ) தாடியைக் குட்டையாக வெட்டியுள்ள ஒரு மனிதன் சலாம் செய்து கொண்டிருப்பதைப் போன்ற உருவம் பொறிக் கப்பட்டுள்ள ஒரு மண்பாண்ட மூடி; அவன் ஒரு சிறிய மேல் சட்டை (Short petty coat) அணிந்துள்ளான்.

(ஏ) எருதையோ அல்லது யானையையோ போன்ற ஒரு மிருகத் தின் மேல் சவாரி செய்வதைப் போன்ற உருவம் பொறிக்கப்பட்ட மண்பாண்ட மூடி; அவன் சமசதுரமான (Square) தலைப்பாகை அணிந்துள்ளான். அவனுடைய தாடி குட்டையாக வெட்டப் பட்டுள்ளது.

(ஐ) நிர்வாணமான ஒரு மனித உருவம்; அவன் அணிந்துள்ள தலைப்பாகை உச்சியில் குறுகி கூர்மையாக உள்ளது (Conical)

(ஒ) எலும்பும், அடுப்புக்கரியும், மண்பாண்டத் துண்டுகளும்.

28. தொதநாடு—சோலூருக்கருகிலுள்ள ஒரு மண் குவி

யலிலிருந்து 12–1–1872-ல் எடுக்கப்பட்டவை:-

(அ) அஸ்திச் சட்டி; இது ஒரு கரடு முரடான மண்பாண்டம் (Coarse pottery); இப்போதுள்ள மண்பாண்டத்தைப் போன்ற வடிவமுள்ளது. அதனுள் வெந்து கருகிய எலும்புகள் நிறைய உள்ளன.

(ஆ) ஒரு சிறிய மண்பாண்டத்தின் பாகம்; அதனுள் நீள் உருண்டை வடிவமான (Cylindrical) வெள்ளைக்கல் மணிமாலை ஒன்றுள்ளது. ஒவ்வொரு வெள்ளைக்கல்லிலும் மூன்று கருப்புக் கோடுகள் காணப்படுகின்றன. பளிங்கினால் செய்யப்பட்ட மற்றொரு மாலையின் சில மணிகள் இளகி ஒன்றோடொன்று ஒட்டினாற்போல் உள்ளன.

29 தொதநாடு—சோலூர் அருகே உள்ள மற்றொரு மண் குவியலிலிருந்து 12-1–1872ல் எடுக்கப்பட்டவை:-

(அ) இரண்டு க்ஷவரக்கத்திகள்.

(ஆ) வீசி எறியக்கூடிய பளுகுறைந்த எறிவேலின் தலை அல்லது ஈட்டித்தலை (Javelin or arrow-head); இது அழகாகச் செய்யப்பட்டுள்ளது. பிடியின் பக்கம் ஒன்று சேரும்படி இரண்டு மேட்டுக்கோடுகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளது (two sharply-cut converging ridges near the handle).

(இ) வெண்கலப் பாத்திரத்தின் உடைந்த துண்டுகள்.

(ஈ) இலைவடிவமான அம்பு அல்லது எறிவேலின் தலையும் அதே வடிவமுள்ள ஈட்டித்தலையும் (Javelin and a spear-head).

(உ) அகலமான அழகிய குத்துவாள் (broad handsome dagger).

(ஊ) ஈட்டித்தலைகளின் துண்டுகளும் மிருகங்களின் பாகங்களும்.

30 தொதநாடு—சோலூருக்கருகிலுள்ள ஒரு மண் குவியலிலிருந்து 19-1-1872ல் எடுக்கப்பட்டவை:-

(அ) பருமன் சிறியதாக உள்ள ஈட்டித்தலை (Small narrow spear-head).

(ஆ) வெந்த எலும்புகள் உள்ள அஸ்திச்சட்டி.

31. தொதநாடு — சோலூருக்கு மேற்கே ஹுளவக் குந்தை[34] என்னும் குன்றின்மேல் உள்ள ஒரு மண்குவியலிலிருந்து 19–1–1872ல் எடுக்கப்பட்டவை:-

(அ) க்ஷவரக்கத்தியும் அரிவாளும் (razor and sickle).

(ஆ) எலும்பும் அடுப்புக்கரியும்; அழகாகச் செய்யப்பட்ட ஈட்டி அல்லது எறிவேல் தலையும் (Spear or Javelin head).

(இ) வெண்கலப்பாத்திரத்தின் உடைந்த பாகங்கள்.

(ஈ) இரண்டு ஈட்டித்தலைகள் (Spear heads); ஒன்று சிறிய தாகவும் நன்ருகச் செய்யப்பட்டதாகவும் உள்ளது.

32. தொதநாடு — சோலூருக்குக் கிழக்கே மலைத் தொடர்களில் உள்ள ஒரு மண்குவியலிலிருந்து 25–1-1872ல் எடுக்கப்பட்டவை:-

(அ) குவியாழமற்ற வாயகலமான பானையும் அதன் மூடியும் அதனுள் எலும்புகளும் குவியாழமற்ற வெண்கலப் பாத்திரமும் இருந்தன (basin-shaped bronze)

(ஆ) எலும்புகளும், மண்ணும், மை தீட்டும் வெண்கலக் கம்பியும் கொண்ட மற்ருெரு மண்பானை.

(இ) மண்ணும் எலும்புகளும் கொண்ட உடைந்து போன இதர பல மட்பாண்டங்கள்.

33. தொதநாடு—கொடநாடு ஊரின்[35] அருகே உள்ள ஒரு மண்குவியலிலிருந்து எடுக்கப்பட்டவை (From a Barrow near Kodanad Ooru in Todanad):-

(அ) வாயகலமான ஒரு மண்பாண்டம்.

(ஆ) வாயகலமான குவியாழமற்ற ஒரு வெண்கலப் பாத்திரம்; கருப்புநிறமானது.

(இ) எலும்பும் மண்ணும் கொண்ட அஸ்திச் சட்டி

(ஈ) கண்ணுக்கு மை தீட்டும் வெண்கலக் கம்பி (Bronze collyrium rod).

34. பேரங்கநாடு—கக்கோரா (Kakora)[36] என்னும் இடத்திற்கருகே பொங்குப்பெட்டா (Pongubetta)விலுள்ள ஒரு மண்குவியலிலிருந்து 25–4–1872-ல் எடுக்கப்பட்டவை:-

(அ) அழகான வடிவமுள்ள சிறிய ஈட்டித்தலை (Spear head)

(ஆ) உடைந்துபோன அஸ்தி பானை; இது காக்காய்ப் பொன்னுல் மெருகிடப்பட்ட அழகானதொரு மண்பாண்டம்; இதனுள் மை தீட்டும் வெண்கலக் கம்பி ஒன்றிருந்தது.

(இ) சாதாரண சட்டிப் பானையைப் போன்ற அஸ்திபானை; அதன் மேல் தலைகீழாக வைக்கப்பட்ட மூடி; இம்மூடியின் மேல்

பக்கத்தில் ஒரு உருவம் பொறிக்கப் பட்டிருந்தது போல் தெரிகின்றது. இந்த அஸ்திபானை அவ்வளவு நல்ல மண்பாண்டமல்ல. அது மெருகிடப்படவில்லை. அதனுள் மிக அழகாகச் செய்யப்பட்ட ஒரு வெண்கலப் புட்டி இருநதது; அது பூவின் மொக்கைப் போன்ற வடிவமுள்ளது (Shaped like a flower bud). அதற்கு மூடி இல்லை மேலும் மங்கிய சிவப்பு நிற மணிகளாலான ஒரு பாலையும் இரும்புத் துண்டுகளும் இருந்தன.

(ஈ) ஒரு பெரிய அஸ்தி பானை; இது காக்காய்ப் பொன்னால் மெருகிடப்பட்ட அழகான மண்பாண்டம். மூடியுடன் கூடியது. இந்த அஸ்தி பானையில் வாயகலமானதும் சில கோடுகளால் அலங்கரிக்கப்பட்டதுமான ஒரு குவியாழமற்ற வெண்கலப் பாத்திரமும் (Bronze basin), அதிகமாகத் துருப்பிடித்த ஒரு இரும்பு வெட்டுக் கத்தியும், துணி சுற்றப்பட்ட பிடியுள்ள இரும்பு க்ஷவரக்கத்தியும், இலைவடிவமான சிறிய ஈட்டித் தலையும் (Spear head), இரும்புத் துண்டுகளும், மரக் கைப்பிடிக்குப் போடப்பட்ட இரும்புக் காப்பும் மரப்பிசின் துண்டுகளும் (Resin), வரண்ட ஆரஞ்சு பழத்தோல்களும் (Orange peels), மூக்கில் அணியும் ஒரு சிறிய ஆபரணமும், ஒரு வெண்கல ஆபரணமும், மரத்துண்டுகளும், பட்டுத்துணியின் மிகச் சிறு துண்டுகளும் (Minute pieces of silk), எலும்புகளும் காணப்பட்டன.

35 பேரங்கநாடு—அதே குன்றில் இரண்டாவது மண் குவியலிலிருந்து 25-4-1872-ல் எடுக்கப்பட்டவை.

(அ) பெரிய மூடியுடைய அஸ்தி பானை; இது நடுத்தரமான மண்பாண்டம் அதனுள் இரும்பாலான ஈட்டித்தலை (Spear head) காணப்பட்டது.

(ஆ) இன்னொரு அஸ்தி பானை.

36. அதே குன்றின் மேல் மூன்ருவது மண் குவியலிலிருந்து 25-4-1872-ல் எடுக்கப்பட்டவை.

(அ) மூடி மிகச் சிறியதாக உள்ள அஸ்திபானை.

(ஆ) உடைந்து போன பெரிய மூடியையுடைய அஸ்திபானை.

(இ) உச்சி தட்டையாக உள்ள நீள் உருண்டை வடிவமான இரும்புத்துண்டு.

(ஈ) இரும்பாலான மை தீட்டும் சாதனம் (?)

(உ) தண்ணீர் ஊற்றுவதற்கு ஏற்றவாறு வாய்ப்பக்கத்தில்

பள்ளமாக்கப்பட்ட அஸ்திபானை; அதன் மூடி உடைந்துள்ளது.

(ஊ) எலும்பும், வெண்கலத்தாலான மை தீட்டும் கம்பியும்.

37. அதே குன்றின் மேல் பெரிதாக உள்ள மூன்று மண் குவியல்களில் மிகப் பெரிய மண்குவியலிலிருந்து 25-4-1872-ல் எடுக்கப்பட்டவை.

(அ) எலும்பும் அடுப்புக் கரியும் உள்ள ஒரு குவியலில் காணப் பட்ட ஒரு ஈட்டித் தலை (Spear-head).

(ஆ) மண்ணும் எலும்பும் உள்ள ஒரு பானை

(இ) காக்காய்ப் பொன்னால் மெருகிடப்பட்ட அழகான சட்டி பானை; அதனுள் குவியாழமற்ற வாயகலமான வெணகலப் பாத் திரம்[37] தலைகீழாக வைக்கப்பட்டிருந்தது அது மிகப் பச்சை நிறமான துருப்பிடித்திருந்தது. மேலும் இச்சட்டி பானையினுள் மை தீட்டும் வெண்கலக் கம்பியும் (Bronze collyrium rod), மண்ணும் காணப்பட்டன.

38. பேரங்க நாடு— உத்துராயக் கோட்டை இருந்த இடத்தினருகே உள்ள கிஸ்ட்வேன்களிலிருந்து (Kist vaens) எடுக் கப்பட்டவை:-

(அ) பிடியில்லாத இரும்புக் குத்துவாள் (Iron dagger).

(ஆ) தடிப்பான மண்பாண்டங்களின் உடைந்த துண்டுகள்; இவை மிகப்பிரமாதமாக மெருகிடப் பட்டவை (Very highly-glazed).

39. பேரங்க நாடு— நிடுகுளாவுக்கருகிலுள்ள ஆஜாரம் (Azaram) என்று சொல்லப்படும் வட்டமான வரிசையில் நடப் பட்டுள்ள கல்வட்டப் புதைக்குழியிலிருந்து எடுக்கப்பட்டவை:-

(அ) அடுப்புக்கரியும் பதினொன்று வெண்கல கை வளையங் களும் (Bracelets).

(ஆ) அடுப்புக்கரியும் இரண்டு மூன்று வெண்கல கைவளையங் களும் சில வளையங்களின் துண்டுகளும்.

(இ) கைவளையங்களும் அவைகளின் உடைந்த துண்டுகளும் இரண்டு வெண்கல மோதிரங்களும்.

(ஈ) இரும்பாலான மூன்று பெரிய ஈட்டித்தலைகள் (Spear heads) இவை மிகச்சிறிதே துருப்பிடித்துள்ளன: அடியில் சமசதுர வடிவுள்ளவை (Square at bottom).

(உ) நீண்டும் அகலமாகவும் உள்ள ஒரு உளி [Chisel].

[ஊ] வெட்டுக்கத்தியும் எழுத்தாணி போன்ற இரும்புக்கம்பி யும்.

[எ] அடுப்புக்கரியும் எலும்பும்.

5. வீர கற்களும் மஹாசத்தி கற்களும்

இனி புதைக்குழிகளல்லாத இன்னொரு வகை நினைவுச் சின்னங்கள் நீலகிரியின் பல பாகங்களில் காணப்படுகின்றன. மனித உருவங்கள் செதுக்கப்பட்ட கற்பலகைகள் பின் சுவர்களாக நடப் பட்டும் அதன் இரு பக்கங்களிலும் இரண்டு கற்பலகைகள் அதன் பக்க சுவர்களாக நடப்பட்டும், மேலே கூரை போன்று இன்னொரு கறபலகை மூடப்பட்டும் உள்ள இந்நினைவுச் சின்னங்களை படகர்கள் 'சிலா கல்லு' என்றும் 'வீர கல்' என்றும் அழைக்கின்றார்கள். புதை பொருளாராய்ச்சியாளர்கள் இவைகளைக் 'கிராம்லெக்' (Cromlech) என்று அழைக்கின்றார்கள். நீலகிரியிலுள்ள இத் தகைய நினைவுச் சின்னங்களைப் பற்றி நீலகிரி கெஜெட்டீர் பின் வருமாறு விவரிக்கின்றது:-

'' இவைகளை படகர்கள் 'சிலா கல்லு' (அதாவது உரு வங்கள் செதுக்கப்பட்ட கற்கள்) என்றும், குறும்பர்களும் இரு ளர்களும் 'பீர கல்லு' (Bira kallu), அதாவது 'வீர கற்கள்' (Hero stones) என்றும் அழைக்கிறார்கள். இவை ஒரு அலாதியான வகையைச் சேர்ந்தவை. இவைகளுக்கும் மேற் சொல்லப்பட்ட இதர நினைவுச் சின்னங்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை யென்று தோன்றுகின்றது. வட்டக்கட்டிடங்கள் நீலகிரி பீடபூமி யின் மேல் பரவலாக இருப்பதுடன் அவை பொதுவாக உயர்ந்த மலையுச்சிகளில் செடிகொடிகளில்லாத இடங்களில் காணப்படு கின்றன. ஆனால் இந்த வீர கற்கள் (Cromlechs) மலைகளை விட்டு தாழ்ந்த குன்றுச்சரிவுகளில் நிறுவப்பட்டுள்ளன. அன்றியும் இவை கள் கீழே சமவெளிப் பிரதேசத்திலிருந்து நீலகிரி மலைகளுக்கு வர வசதியாக அமைந்துள்ள கணவாய்களுக்கருகில் காணப்படுகின்றன இவைகள் இறந்தவர்களின் எலும்புகளையும் இதர ஈமப் பொருட் களையும் புதைக்குமிடங்களல்ல என்று தோன்றுகின்றது. இவை களில் காணப்பட்ட சில பொருட்கள் வட்டக்கட்டிடப் புதைக்குழி களில் காணப்பட்டவைகளிலிருந்து வேறு பட்டவைகளாய் இருப் பதோடல்லாமல் நிச்சயமாக பிற்காலத்தவைகளாகவும் உள்ளன.

இவை பலகை போன்ற மூன்று கற்களை மூன்று பக்க சுவர்களாக நட்டு மேலே மூடப்பட்டதாகவும் ஒரு பக்கம் வாயிற் போல திறந்ததாகவும் உள்ளன. இவ்வித நினைவுச் சின்னங்களில் மிகப் பெரியது கோத்தகிரி அருகிலுள்ள ஜக்கனேரியில் உள்ளது. அத னுள்ளே ஒருவர் நேராக நிமிர்ந்து நிற்கும் அளவுக்கு உயரமுள்ளது. ஒன்றையொன்று சேர்ந்தாற் போல் மூன்று சுவர்களாக நடப்பட் டுள்ள தட்டையான கற்களில் பின் சுவராக அமைந்துள்ள பலகைக கற்களின் உட்புறத்தில் பல உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவைகள் இந்த நினைவுச் சின்னங்கள் நிறுவப்பட்ட காலத்தைப் பற்றியும் அவைகள் நிறுவப்பட்டதின் நோக்கத்தைப் பற்றியும் அவைகளை நிறுவிய மக்களைப் பற்றியும் நாம் ஊகித்து அறியும்படி யாக அமைந்துள்ளன.'' [38]

இவ்வித கற்சிலைகளின் பல படங்களை (Photographs) பிரீக்ஸ் எழுதியுள்ள புத்தகத்தில் காணலாம் [39] பின் சுவர்களாக நடப்பட்ட கற்பலகைகளில் ஒன்றின் மேல் ஒன்றாக பல வரிசை களில் மனித உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. எல்லா வரிசை களுக்கும் மேல் உச்சியில் சூரியன், சந்திரன் ஆகியவைகளின் சின் னங்களுக்கு அடியில் ஒரு சிவலிங்கமும் அதன் எதிரே லிங்கத்தை நோக்கி மண்டியிட்டு அமர்ந்துள்ள ரிஷபமும், நின்று கொண்டி ருக்கும் ஒரு மனிதனின் உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. "சூரிய சந்திரச் சின்னங்களைச் செதுக்கியிருப்பதானது அவ்வீர கல்லின் மூலம் சொல்லப்பட்ட செய்தியானது என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதைத் தெரிவிக்கின்றது" என்று W. பிரான்சிஸ் விளக்கம் கொடுத்துள்ளார். [40] "கீழ் வரிசைகளில் ஆண்களும் பெண்களும் நின்று கொண்டிருப்பதையோ, யுத்தம் செய் வதையோ அல்லது வேட்டையாடுவதையோ காட்டும் சித்திரங் கள் செதுக்கப்பட்டுள்ளன. தன்னுடைய ஆட்கள் சுற்றிலும் நிற்க ஒரு குதிரை மீது ஏறிக் கொண்டு ஏதோ ஒரு ஆயுதத்தை வீசிக் கொண்டிருப்பது போலவோ அல்லது தரையில் நின்று கொண்டு ஒரு மானையோ, புலியையோ அல்லது யானையையோ ஈட்டியால் குத்திக் கொண்டிருப்பது போலவோ இச்சித்திரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஆண் பெண் இரு பாலரும் இடைக்கு மேலே ஆடையில்லாதவர்களாகக் காக்ஷியளிக்கிறார்கள். பெண் கள் தங்களுடைய காதுகளின் கீழ் பாகம் நீண்டு தொங்கும்படி

பெரிய ஆபரணங்கள் அணிந்துள்ளார்கள். முடியைத் தங்கள் தலைகளின் ஒரு பக்கத்தில் பெரிய கொண்டைகளாக முடிந்துள்ளார்கள். சில கற்சிற்பங்களில் பெண்கள் ஒரு கையை மேலே உயர்த்தி ஒரு பூவையோ அல்லது உருண்டை வடிவமான ஒரு பொருளையோ பிடித்துக்கொண்டிருப்பதைப் போன்று செதுக்கப்பட்டுள்ளது''.[41]

இந்தக் கற்சிற்பங்கள் குடகிலும், மைசூரிலும், பள்ளாரி ஜில்லாவின் மேற்குப் பகுதிகளிலும் காணப்படுகின்ற வீர கற்களிலும் மஹாசக்தி கற்களிலும் காணப்படும் சிற்பங்களை ஒத்திருப்பதாகவும் மசனிகுடியைச் சுற்றிலும் இவை ஏராளமாக உள்ளன என்றும் W. பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.[42] ''இவைகள் சாதாரணமாக தரையில் நடப்பட்ட பலகை போன்ற ஒரே கல்லாக உள்ளன. ஆனால் வீர கல்லானது இவ்விதக் கல்லின் இரு பக்கங்களிலும் சுவர்களாக நடப்பட்ட கற்களையும் அவைகளின் மேல் குறுக்காக மூடப்பட்ட கற்களையும் கொண்டதாக உள்ளது. ஆனால் இவ்விருவித நினைவுச் சின்னங்களிலும் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களின் பொதுவான அமைப்பும் அவைகளில் பெண்கள் அணிந்துள்ள தலை உடைகளும் (Head dress) ஒரே மாதிரியானவை'' என்று W. பிரான்சிஸ் மேலும் கூறுகின்றார்.[43]

படகர்கள் இத்தகைய நினைவுச் சின்னங்களை 'மாய்கைகள்' என்றும் அழைக்கின்றார்கள். இவைகள் மசனிகுடி, சீகூர், சிரியூர், சோலூர், தூடகூர், கடநாடு, சின்ன குன்னூர், கக்குச்சி, ஜக்கனேரி, கோணகேரி, ஹளெயூர் (ஹள்ளூர்), தூதூர், மேலூர் மேல்குந்தை ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன.

மிகச்சிறந்த சிற்பங்கள்

நீலகிரியிலுள்ள சிற்பங்கள் செதுக்கப்பட்ட இந்த வீர கற்களில் கீழக் கண்ட இடங்களில் உள்ளவை மிகச்சிறந்தவை என்று நீலகிரி கெஜெட்டீர்[44] சொல்லுகின்றது:-

1. சோலூருக்கு மேற்கே அரை மைல் தூரத்தில் உள்ள வீர கற்கள்

2. மேலூருக்குத் தெற்கே சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள சோலையில் உள்ள வீர கற்கள் எல்லா வீர கற்களைக் காட்டிலும் மிகச்சிறந்த வேலைபாடுடையதொன்று இங்கேதான் உள்ளது.

3. ஜக்கனேரி பனகுடி சோலையில் உள்ள வீர கற்கள். இவை

கோத்தகேரியிலிருந்து செயின்ட் கேத்தரின் நீர்வீழ்ச்சிக்குப் போகும் கால் பாதையருகிலுள்ளன. இங்கேதான் நீலகிரியிலுள்ள வீர கற்களிலெல்லாம் மிகப் பெரிய வீர கற்கள் உள்ளன (The biggest). இவைகளை பிரீக்ஸ் தொட்டூரு தொகுப்புகள் (Dodduru groups) என்று குறிப்பிட்டுள்ளார்.

4. ஜக்கத்த கம்பெ (Jakkata kambe) என்னும் ஊரிலிருந்து சுமார் ஒரு மைல் தெற்கே உள்ள வீர கற்கள்.

5. கோத்த கேரிக்கு மூன்று மைல் தென்கிழக்கே உள்ள கோணக்கேரி கிராமத்தைச் சேர்ந்த அச்செனியிலுள்ள வீர கற்கள்

6. கெங்கரை கிராமத்தைச் சேர்ந்த ஹள்ளூரில் உள்ள வீர கற்கள் (பிரீக்ஸ் இவ்வூரை 'ஹளெயூர்' என்று குறித்துள்ளார்). கெங்கரையிலிருந்து ஒரு மைல் வடக்கே ஹிரியொடெயர் கோயிலில் ஒன்றுள்ளது.

7. தூதூரில் கொலக்கம்பைக்கு மேற்கே சுமார் இரண்டு மைல் தூரத்திலுள்ள வீர கற்கள்.

"கொலக்கம்பை நீர்வீழ்ச்சிக்கருகில் பவானி பள்ளத் தாக்கின் எதிரே மிகச் சரிவான ஒரு பாதையின் பக்கம் ஒரு இடத்தில் சிற்பங்கள் செதுக்கப்பட்ட விசேஷமான வீர கற்கள் உள்ளன. அவைகளிலிருந்த கற்கள் அகற்றப்பட்டு அவை பாழடைந்த நிலையிலுள்ளன. அக்கற்கள் அகற்றப்படுவதற்கு முன் வால்ஹவுஸ் (Walhouse) அவைகளின் சித்திரங்களை வரைந்து அவைகளைப் பற்றி விவரித்துள்ளார். அவைகளைப்போல் நீலகிரி மலைகளில் வேறு எந்த வீரக்கற்களும் இல்லை. அவைகள் முதலில் ஐந்து வீரக்கற்களைக் கொண்ட ஒரு தொகுப்பாக இருந்தன. மத்தியில் வரிசையாக மூன்று பெரிய வீரகற்களும் அவைகளின் இரு பக்கங்களில் சிறிய வீரகற்கள் இரண்டும் ஒரே திசையைப்பார்த்தவண்ணம் இருந்தன. ஆனால் அவைகளின் கற்கள் இப்போது தரையில வீழ்ந்து கிடக்கின்றன. அந்த இடத்தில் இப்போது சோலை மரங்கள் வளர்ந்துள்ளன." இவ்வாறு நீலகிரி கெஜெட்டீர் சொல்லுகின்றது.[45]

பிரீக்சும் காங்கிரீவும் இத்தகைய வீர கற்கள் அனைத்தையும் கண்டு எழுத வில்லையென்றும் அவர்கள் காணாத எத்தனையோ மிக அழகான வீர கற்கள் உள்ளனவென்றும் ஆனால் அவைகளையெல்லாம் கண்டுபிடித்து விவரிப்பதன் மூலம் நாம் ஒரு நிச்சயமான முடிவுக்கு வரக்கூடிய சாத்திய மில்லையென்றும் W. பிரான்சிஸ் சொல்லுகின்றார்.[46]

சோலூரிலுள்ள ஒன்றாவது வீர கல்லின் உள் தோற்றம் குதிரை மீது ஏறிக்கொண்டிருக்கும் வீரனும் தரையில் நின்று கொண்டிருக்கும் வீரர்களும் போருக்குச் செல்லும் காட்சி.

சோலூரிலுள்ள 2–ஆவது வீர கல்லின் முழுத்தோற்றம்.

மேலூரிலுள்ள வீர கல் (Hero stone) வேட்டையின் போது ஒரு புலியை ஈட்டியால் குத்திக்கொண்டிருக்கும் ஒரு வீரனின் காட்சி.

(Courtesy : Director of Government Museum, Madras.)

இது வரை விவரிக்கப்பட்ட வீரகற்கள் மட்டுமின்றி தூடகூரில் ஏக்குணிக்கும் கடசோலைக்கும் இடையே உள்ள பன குடி மஹாலிங்க சுவாமி கோயிலருகே காணப்படும் வீர கற்களின் சிற்பங்களும் மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளன. இவைகளைப் பற்றியும் ஹுல்லத்தி ஊருக்கருகிலுள்ள 'கித்திரெ பன'[47] சோலையிலும், 'மாய் கெஹொல' என்றழைக்கப்படும் தோட்டத்திலும் இருக்கின்ற வீரகற்களைப்பற்றியும் நீலகிரி கெஜெட்டீரில் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆங்கிலேயர்கள் இவ்விடங்களுக்குச் சென்று இவைகளைப்பார்க்கவில்லை போலும். இவைகளைப் போல் நீலகிரியில் இன்னும் எத்தனையோ இடங்களில் வீர கற்கள் உள்ளன என்று நீலகிரி கெஜெட்டீர் குறிப்பிட்டுள்ளது உண்மையென்பது இதிலிருந்து தெரிகின்றது.

மேலூரிலுள்ள வீர கற்களின் சிற்பங்களை பிரீக்ஸ் அவர்கள் போட்டோ எடுத்து சர் வால்ட்டர் எல்லியட் (Sir Walter Elliot) என்பவர்க்கு அனுப்பி அவைகளின் தாத்பரியத்தை விளக்குமாறு கேட்டிருந்தார். எல்லியட் அவர்கள் அச்சிற்பங்களைப் பற்றி கொடுத்துள்ள விளக்கம் வருமாறு:-

"இது ஒரு ஞாபகச் சின்னம். வீர கல் (அல்லது பீரகல் Birakal), மற்றும் மாஸ்த்தி கல் (அல்லது மஹாசத்தி கல்) ஆகிய இரண்டும் சேர்ந்தது. இது கொல்லப்பட்ட ஒரு வீரனின் வரலாறு. இந்த வீர கற்களின் உருவங்கள் புலியினால் கொல்லப் பட்ட ஒரு வீரனையும் அவனுடைய சிதைத்தீயில் விழுந்து உயிரை மாய்த்துக்கொண்ட அவனுடைய பத்தினியர்களையும் குறிக்கின்றன. மாஸ்த்தி கல் (அல்லது மஹாசத்தி கல்) என்பது வலது கையை மேலே உயர்த்தியுள்ள ஒரு பெண்ணின் உருவத்தைத் தாங்கியுள்ள கல்லாகும். கையில் உள்ள உருண்டையான பொருள் எலுமிச்சம் பழம். இது சத்தியானவள் இறந்து போன தனது கணவனுடைய சிதைத்தீயில் விழுவதற்கு முன் தன்னைச் சூழ்ந்துள்ளவர்களுக்கு எலுமிச்சம் பழங்களையும் பூக்களையும் கொடுப்பதன் அறிகுறியாகும். பல சந்தர்பங்களில் புஜமும் கையும் மாத்திரம் தூணோடு சேர்ந்தாற் போல் செதுக்கப்பட்டுள்ளது. கணவன் இயற்கையான மரணமடையாமல் அகோர மரணம் (Violent death) அடையும் போது மனைவியின் முழு உருவம் செதுக்கப்படுகின்றது. இது அத்தகையதொரு மஹாசத்தி கல்லாகும்."[48]

மேலூரிலுள்ள இரண்டாவது பிரிவைச் சேர்ந்த வீர கற்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களை டாக்டர் **போப்** அவர்கள் கீழ்கண்டவாறு விளக்கியுள்ளார்:

"உருவங்களின் இடுப்புக்கு மேல் ஆடைகள் இல்லை. எல்லோரும் கழுத்தில் மணியாரங்கள் (Necklaces) அணிந்துள்ளார்கள். தலைமுடியானது தலையின் வலது பக்கம் ஒன்று சேர்த்து ஒரு கொண்டை போன்று முடித்துக் கட்டப்பட்டுள்ளது (தொட்டூரு, அச்செனி, ஹளெயூரு ஆகிய இடங்களிலுள்ள வீர கற்களில் ஆண்கள் தங்கள் தலை முடிகளை தலையின் உச்சியில் முடித்துக கட்டியுள்ளார்கள்; அல்லது தலையில் முடிச்சே இல்லாமலிருக்கும்) காதுகளின் கீழ்ப் பக்கங்கள் செயற்கை முறையில கீழே நீண்டு கொண்டிருக்கும்படிச் செய்யப்பட்டுள்ளது. புஜங்களிலும், கைகளின் மணிக்கட்டுகளிலும், கால்களிலும் பெரிய வளையல்கள் அணிந்துள்ளார்கள். எல்லோரும் வெறுந்தலையுடனும் வெறுங்காலுடனும் காணப்படுகின்றார்கள். ஆண்கள் துணிகளை இடையில் வரிந்து கட்டியுள்ளார்கள். அவர்கள் வைத்துள்ள ஆயுதங்கள் பாளையக்காரர்கள் உபயோகிக்கின்ற ஆயுதங்களைப் போலுள்ளன."

"மஹாசத்தியினுடைய (Sati) உருவம் மேல் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. ஒரு உருவம் மான் ஒன்றை ஈட்டியால குத்திக்கொண்டிருப்பதானது அந்த வீரன் வேட்டைக்குப் போயிருந்த போது கொல்லப்பட்டான் என்பதைக் காட்டுகின்றது."[49]

மேற்சொன்ன வீரகற்களைப் பற்றி பிரீக்ஸ் இவ்வாறு எழுதுகின்றார்:

"மேலூரிலுள்ள வீர கற்களில் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த பெரிய வீர கற்களின் நடுவிலுள்ள கல்லில் செதுக்கப்பட்டுள்ள உருவங்கள் நீலகிரியிலுள்ள வீர கற்களிலெல்லாம் மிகச் சிறந்த வேலைப்பாடுடையவைகளாகத் தோன்றுகின்றன. இது முதலில் சொன்ன சம்பவத்தையே காட்டுவதாகத் தோன்றுகின்றது. ஆனால் அதன் முக்கியமான நபர் அணிந்திருக்கும் உடை மிகக் கவனமாகவும் விளக்கமாகவும் செதுக்கப்பட்டுள்ளது. தலைப்பாகையானது தலையின் இடது பக்கம்[50] சுருள்சுருளாக நீண்டுள்ளது. தலைப்பாகையின் உச்சியானது ஒரு பூச்செண்டு வடிவமாக மேலே நீண்டுள்ளது. அவ்வீரன் தனது காதுகள் நீண்டு தொங்கும்படியாக பெரிய பெரிய காதணிகள் (Large ear-rings)

அணிந்துள்ளான். இடையில் வாளைச் சொருகுவதற்கான வேலைப் பாடமைந்த ஒரு வாள் கச்சையும் (Sword belt), குத்து வாளும் (Dagger) உள்ளன. இடது கோடியில் ஒரு குதிரை நின்று கொண்டிருக்கின்றது. வீரனுடைய கால்களுக்கு இடையே இரண்டு சிறிய மனித உருவங்கள் அவ்வீரனுடைய உதவியை வேண்டி நிற்பது போல் காணப்படுகின்றன. அவனுடைய தலைக்கு மேல் மூன்று தேவதைகளின் உருவங்கள் (Apsaras) காணப்படுகின்றன. குதிரையின் மேல்பக்கத்தில் இரண்டு தூண்களுக்குப் பின்னால் நின்று கொண்டிருக்கும் ஒரு மனித உருவம் காணப்படுகின்றது. இதன் அர்த்தம் என்னவென்று புரியவில்லை இவ்வீர கல்லின் உருவங்கள் மற்ற அநேக வீர கற்களின் உருவங்களைவிட நல்ல நிலைமையில் இருக்கின்றன (In much better preservation than most)" என்று பிரீக்ஸ் விவரித்துள்ளார்.[51]

மசனிகுடியைச் சுற்றி அநேக வீரகற்களும் மாஸ்த்தி கற்களும் (Mahasati stones) காணப்படுகின்றன. இவைகளில் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டவை. செம்ம நத்தம் என்ற இடத்திலுள்ள பாழடைந்த மண் கோட்டைக்குத் தெற்கில் ஒன்றும், அதற்குத் தெற்கே அரசாங்கக் காட்டிலாகாவைச் சேர்ந்த சோலைக்குள் இரண்டும், அதையடுத்துள்ள பட்டா நிலத்தில் ஒன்றும், மசனிகுடிக்குக் கிழக்கே நான்கு மைல் தூரத்திலுள்ள குடிகேரிமலை, தொரைக்கேரிமலை, மலைப்புரம் ஆகிய பாழடைந்த ஊர்களில் சில வீர கற்களும் மற்றவை மசனிகுடியிலும் அதைச் சுற்றிலும் காணப்படுகின்றனவென்றும், சிங்காரத் தோட்டத்திற்கு இரண்டு மைல் கிழக்கே அரசாங்கக் காட்டிலாகாவைச் சேர்ந்த சோலையில் பல வீரகற்களின் தொகுப்புகள் (Series) காணப்படுகின்றனவென்றும் இவவீரகற்களில் சில பூமியில் பாதி அளவு புதையுண்டு கிடக்கின்றன என்றும்' சிலவற்றினுடைய கற்கள் சிங்காரத் தோட்டத்து மாளிகையின் (Bungalow) தளத்திற்கு போடப்பட்டுள்ளன என்றும் நீலகிரி கெஜெட்டீரில் சொல்லுகின்றது[52] அது மேலும் கூறுவதாவது:- "இவ்வீரகற்கள் பொதுவாக எல்லா வீரகற்களைப் போன்றவைதான். ஒரு கல்லில்மாத்திரம் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மேலே உச்சியில் மனிதனின் உருவமும், சூரியன், சந்திரன், சிவலிங்கம், மற்றும் ரிஷப உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. அதுற்குக் கீழுள்ள இரண்டாவது வரிசையில் நின்று கொண்டிருக்கும் ஆண் பெண் இருபாலருடைய உருவங்கள் காணப்படுகின்றன.

அதன் கீழுள்ள கடைசி வரிசையில் தனது கையில் ஏதோ ஒரு ஆயுதத்தைப் பிடித்து நின்று கொண்டிருக்கும் ஒரு வீரனுடைய உருவம்.''[53]

குடகிலுள்ள இத்தகைய வீரகற்களை 'கொல்லெகல்லு' என்று சொல்லுகிறார்கள். அவைகளை ஆராய்ந்த ரிச்டர் என்பவர் அவைகளைப்பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்: ''மற்ற வகை நினைவுச் சின்னங்களைக் காட்டிலும் 'கொல்லெ கல்லு' என்று சொல்லப்படுகின்ற இந்த நினைவுச்சின்னங்கள் மிகவும் பிற்காலத் தவைகளாகும்' 'கொலலெ கல்லு' என்றால் கொல்லப்பட்ட வீரனுக்காக எழுப்பிய கல் என்று பொருள். இவைகள் போரில் கொல்லப்பட்ட வீரர்களை மதிப்பதற்காக நடப்பட்டவை. இவைகள் குடகு ஜில்லாவின் கிழக்குப் பகுதிகளில் காணப்படுகின்றன. கிக்கெத் நாட்டின் (Kiggetnad) தவள சேரி கிராமத்தில் ஒன்றும், மடிக்கேரிக்கு (Mercara) ஆறு மைல் கிழக்கே கொட்டக்காடு என்ற இடத்தில் சிலவும், பிரேசர் பேட்டை, சோமவார் பேட்டை ஆகிய இடங்களில் பலவற்றையும் நான் பார்த்தேன். இதே போன்ற நினைவுச்சின்னங்கள் மைசூர் தேசத்தின் பல இடங்களில் - முக்கியமாக சிவமொக்க ஜில்லாவின் நகர் வட்டாரத்திலும், வடக்கே வெகு தூரம் பெள்காம் (Belgaum) வரையிலும் காணப்படுகின்றன இவ்வெல்லா இடங்களிலும் இவைகள் ஒரே தன்மையதாக காணப்படுகின்றன. மைசூர் நகரத்தில் இத்தகைய வீரகற்கள் அங்குள்ள இடுகாட்டின் (Grave yard) எதிரே வெட்ட வெளியில் அநேக கும்பல்களாகக் காணப்படுகின்றன. இக்கற்கள் சராசரி 6 அடி உயரமும் 4 அடி அகலமும் 9 அங்குலம் கனமும் உள்ளவைகளாயிருக்கின்றன.''[54]

மைசூர் பகுதிகளிலுள்ள வீரகற்களையும் மாஸ்த்தி கற்களையும் ஆராய்ந்த கர்னல் வில்க்ஸ் (Col. Wilks) என்பவர் அவைகளின் தாத்பரியத்தைப் பின் வருமாறு விளக்கியுள்ளார்:-

''கீழ் வரிசைகள் ஒரு வீரன் வேட்டையாடும் போதோ அல்லது சண்டை செய்யும் போதோ கொல்லப்பட்டதைச் சித்தரிகின்றன. அதற்கு மேலுள்ள வரிசையில் காணப்படும் பெண்களின் உருவங்கள் கொல்லப்பட்ட வீரனை சொர்க்கத்திற்கு அழைத்துக் கொண்டு போகும் தேவதைகள். அதற்கு மேலுள்ள வரிசையா

னது பேரானந்தமயமான சொர்க்கத்தைச் சித்தரிக்கின்றது. அவ் வீரன் தனது மதச்சின்னத்தின் முன்னால் (லிங்காயத்து அல்லது சைவ மதச்சின்னம்) நின்று கொண்டிருக்கிறான். ஒரு கையை மேலே உயர்த்திக் கொண்டிருக்கும் பெண்கள் இறந்துபட்ட வீர னின் சிதைத்தீயில் வீழ்ந்து அவனுடன் உயிரை மாய்த்துக் கொண்ட அவனது மனைவியர். அவர்கள் கைகளில் வைத்துள்ள பொருள்கள் அவர்கள் சிதைத்தீயில் குதிப்பதற்கு முன்னால் பக் கத்திலுள்ளவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் பூக்களையோ அல்லது எலுமிச்சம் பழங்களையோ குறிக்கின்றன'' என்று அவர் விளக்கி யுள்ளார்.[55]

கர்நாடக மாநிலத்தின் வீரகற்களையும் மாஸ்த்தி கற் களையும் ஆராய்ந்த இதர அறிஞர்களும் மேற்சொன்ன கருத்துக் களையே உறுதிபடுத்தியுள்ளார்கள். அம்மாநிலத்திலுள்ள கல் வெட்டுகளை ஆராய்ந்த டாக்டர் M சிதாநந்த மூர்த்தி அவர் களும் அங்குள்ள வீரகற்களுக்கும் மஹாசத்தி கற்களுக்கும் மேற் சொன்ன விளக்கங்களையே சொல்லியுள்ளார்[56]

6 யுத்த பேரிகைகளும் ஆயுதங்களும்

இதுவரை நீலகிரியில் காணப்படுகின்ற ஐந்து வகை நினை வுச்சின்னங்களைப்பற்றி ஆராய்ந்தோம். நீலகிரி படக சமுதாய மக்களிடையே யுத்த பேரிகைகளும் (War drums), போர் வாள் களும் (Swords), குத்து வாள்களும் (Daggers), ஈட்டிகளும் (Spears), எறிவேல்களும் (Javelins) பாதுகாத்து வைக்கப்பட்டுள் ளன. அவைகளை இங்கே கவனிப்போம்.

யுத்த பேரிகைகள்

தூடகூர் ஹிரியொடெயர் கோயிலின் முன் பக்கமுள்ள பெரிய மரத்தின் கிளைகளுக்கிடையே இரும்பினால் செய்யப்பட்ட பழங்கால யுத்த பேரிகையொன்று வைக்கப்பட்டுள்ளது, அதன் சுற்றளவு சுமார் 10 அடி இருக்கும். பல நூற்றாண்டுகளாக வெயில், காற்று, மழை ஆகிய இயற்கை சக்திகளால் பாதிக்கப் பட்டதின் விளைவாக இப்பேரிகையின் இரும்புப் பாத்திரம் வெகு வாகத் துருப்பிடித்து க்ஷீணித்த நிலையிலுள்ளது. அதன் வாயில்

கட்டப்பட்டிருந்த தோல் மறைந்து போய்விட்டது. இவ்விடத்தில் முதன் முதலில் வந்து குடியேறி இங்குள்ள ஹிரியொடெயர் ஆலயத்தை நிறுவிய வரும், 'அக்க–பக்க' (Akka-Bakka) என்ற கல் தோரணத்தை நட்டவரும், தூடகூர் மக்களின் மூதாதையருமாகிய சீபுர அய்ய என்ற பெரியோரால் இது கொண்டுவரப்பட்டது என்று தூடகூர் மக்கள் சொல்லுகின்றனர்கள். இதே போல் இன்னொரு பேரிகையும் இருந்ததென்றும் அது சீபுர அய்யனின் மகள் கடநாடு மக்களின் மூதாதையராகிய கோட அய்யனுக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்டபோது அவ்வம்மையாருக்குச் சீதனமாகக் கொடுக்கபட்டதென்றும் மரபுரைகள் சொல்லுகின்றன. கடநாடு ஹிரியொடெயர் கோயிலில் வைக்கப்பட்டுள்ள இப்பேரிகைககு தெவ்வ பண்டிகையின் போது அவ்வூர் மக்கள் பூஜையும் இதர சடங்குகளும் செய்கின்றனர்கள்.

கோணகேரி ஊருக்கு அருகிலுள்ள கோயிலில் இரண்டு யுத்த பேரிகைகள் இருந்தனவென்றும் அவைகளில் கட்டப் பட்டிருந்த தோல்கள் காணப்படவில்லை யென்றும், இரும்பினுல் செய்யப்பட்ட அரச கிரீடம் போன்றதொரு பொருளும் காணப் பட்டதென்றும் 1941-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ந் தேதி அங்கே சென்று பார்த்த காலஞ் சென்ற அச்சனக்கல் M.K பெள்ளி கவுடர் அவர்கள் குறித்துள்ளார்கள்[57] கோடமலை ஊரிலும் இத் தகைய யுத்த பேரிகை உள்ளதென்றும் இதற்கும் தெவ்வ பண்டி கையின்போது பூஜையும் சடங்குகளும் செய்கிறார்களென்றும் தெரிகின்றது.

மேற்சொன்ன விஷயங்களிலிருந்து நீலகிரிக்கு வந்த படக முன்னோர்கள் அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பது நிரூ பணமாகின்றது. ஏனென்றால் அரசர்களும் அரச வம்சத்தைச் சேர்ந்த பிரபுக்களும் தான் யுத்த பேரிகைகள் வைத்திருப்பார்கள். பண்டைக்காலத்தில் அரசர்களும் குறுநில மன்னர்களும் தங்க ளிடம் அரசச் சின்னமாக யுத்த பேரிகைகள் வைத்திருந்தார் களென்றும் அவை பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு காலா காலத் தில் குளிப்பாட்டி மந்திரங்கள் சொல்லி பூஜிக்கப்பட்டனவென்றும் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கூறுவது இங்கே கவனிக்கத் தக்கது.[58]

போர் வாள்களும் இதர ஆயுதங்களும்

நீலகிரிக்கு வந்த படக முன்னோர்கள் யுத்த பேரிகைகள் மட்டுமின்றி போர் வாள்களையும், அம்புகள், ஈட்டிகள், எறி வேல்கள் போன்ற இதர ஆயுதங்களையும் உடன் கொண்டு வந்துள்ளார்கள். நீலகிரி ஆங்கிலேயர்களின் அதிகாரத்திற்குட்பட்ட போது படகர்கள் இவ்வாயுதங்களில் பலவற்றைத் தங்களுக்கு வேண்டிய விவசாய-வீட்டு உபயோகக் கருவிகளாக மாற்றிக் கொண்டார்களெனத் தெரிகின்றது. இதன் காரணத்தை ஊகித்தறியலாம். தங்களிடம் இவ்வாயுதங்கள் இருப்பதாக ஆங்கிலேயர்கள் அறிந்து கொண்டால் இதன் காரணமாக அவர்கள் தங்களைத் துன்புறுத்தக் கூடுமென்று அஞ்சி அவ்வாறு செய்தார்கள். சண்டைக்கத்திகள் பலவற்றை பூமியில் புதைத்திருககவும் கூடும். சில ஊர்களில் இவ்வாறு புதைக்கப்பட்ட சில போர்வாள்கள் கண்டெடுக்கப்பட்டு அவை வருடா வருடம் பூஜிக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிகின்றது. படகர்களின் மஹாசக்தி (ஹெத்தையம்மன்) கோயில்களில் வைக்கப்பட்டுள்ள புனிதத்தடிகளின் நுனிகளில் சில பழங்கால அம்புத்தலைகளும், ஈட்டித்தலைகளும், எறிவேல்களும் பொருத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

நீலகிரியில் காணப்படும் இந்நினைவுச் சின்னங்களை நிறுவியவர்கள் யார் என்பதைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

—தொடரும்

குறிப்புகள்

1. Gazetteer of the Nilgiris - p. 96.
2. Ibid pp. 96-97
3. Ibid p. 98
4. Ibid pp 316-317
5. Ibid p. 98.
6. Ibid p. 98.
7. Ibid p. 98.
8. Ibid p. 98.
9. Ibid p. 98.
10. Ibid p. 98.
11. Ibid p 98.
12. Ibid p 98.
13. Ibid p 98.
14 J. W. Breeks-op. cit. pp. 126-137 (An Account of the Primitive Tribes and Monuments of the Nilgiris.)
15. Gazetteer of the Nilgiris-p. 95.
16. Ibid. p. 95.
17. Ibid. p. 95.
18. J. W. Breeks-op cit. pp. 126-137.
19. 'சிக்கேத்னவைபெட்டா' (Chiketnavoibetta) என்ற பெயர் 'சிறிய சரிவையுடைய மலை' (Mountain with a small slope) என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறதென்று பிரீக்ஸ் எழுதியுள்ளார்! (Vide op. cit. p. 74) ஆனால் இப்பெயர் 'சிக்க கேத்தன அவ்வெ பெட்டா' என்ற பெயரின் திரிபு என்பது வெளிப்படை. சிக்க கேத்தனின் தாயாருடைய குன்று என்பது இப்பெயர் தரும் பொருளாகும். ஒரு வேளை சிக்க கேத்தன் என்பவருடைய தாயார் இங்கே வீர மரணம் எய்தியதால் அந்த மஹாசதியின் (Mahasati) நினைவாக இப்பெயர் வைக்கப்பட்டது போலும்.
20. J. W. Breeks-op. cit. p. 74. (foot note)
21. இதே பாத்திரங்கள்தான் இன்றைக்கும் படகர்களின் கோயில்களில் பூஜைக்கு உபயோகிக்கப்படுகின்றன. இதை 'ஜவ்விக்கிண்டி' என்று சொல்லுகிறார்கள். படகர்களின் மூதாதையர்கள் நீலகிரிக்கு வரும்போது இவ்விதப் பூஜைப் பாத்திரங்களையும், 'இலைக்கண்ணாடி' என்று சொல்லப்படும் முகம் பார்க்கும் வெண்கலக் கண்ணாடிகளையும், பெரிய வட்டில்களையும் கொண்டு வந்ததைப்பற்றி கூறும் மரபுரையை ஏற்கனவே பார்த்தோம்.

22. 'குன்ஹறக்கில பெட்டா' என்ற பெயருக்கு 'சிறிய பறவை களின் குன்று' என்பது பொருள்.

23. J. W. Breeks-op. cit p. 74.

24. இத்தகைய அறிவாளைப் படகர்கள் 'கூய்க்கத்தி' என்று சொல்லுகிருர்கள்.

25. இந்த விவரணையைக் கவனித்தால் இதுவும் ஒரு 'ஜுவ்விக் கிண்டி' என்று தோன்றுகின்றது.

26. இப்பெயர் இப்போது கடநாடு என்று மருவியுள்ளது. பிரீக்ஸ் காலத்தில் (அதாவது 1872ல்) இவ்வூர் 'கொடநாடு' என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. மடித்தொரையி லிருந்து இங்கே முதன் முதலில் வந்து ஊர் அமைத்த இன்றைய தொதநாடு மக்களுடைய மூதாதையரின் பெயர் 'கோட' என்று சொல்லப்படுகின்றது. கோடனுடைய நாடு என்ற பொருளில் அது 'கோடநாடு' என்றழைக்கப்பட்டு பின்னர் காலப்போக்கில் அது கொடநாடு என்றும் பிறகு கடநாடு என்றும் மருவியுள்ளது.

27. பிரிக்ஸ் காலத்தில் 'பிளிக்கல்' என்று அழைக்கப்பட்ட பெயர் இப்போது பெள்ளிக்கல் என்று மருவியுள்ளது. பிளிக்கல் என்பதுதான் சரியான பெயர். 'பிளிக்கல் பெட்டு' என்ருல் வெள்ளை நிறக் கற்களுள்ள மலை என்று பொருள்.

28. இதை பிரீக்ஸ் (Nataneri) என்று குறித்துள்ளார்; நட்ட நேரி என்ற பெயராக இருக்கலாம். நட்ட நேரி என்ற பெயருடைய இந்த இடம் எங்கிருக்கிறதென்று தெரியவில்லை.

29. இத்தகைய சட்டிகள் இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் படகர்களின் வீடுகளில் உபயோகத்திலிருந்தன; இவைகளைத்தான் 'சட்டி' என்பார்கள். சட்டி பானையை 'மடக்கெ' என்று சொல்லுவார்கள்.

30. 'கோத்தகேரி' என்பதுதான் சரியான பெயர். பிரீக்ஸ் காலத்தில் (1872ல்) இப்பெயர் கோத்தகேரி என்றே சொல்லப்பட்டுள்ளது (Vide Breeks, op. cit. pp. 134-135). கோத்தகேரி என்பதுதான் சரியான பெயர் என்று 1908-ல் வெளியிடப்பட்ட நீலகிரி கெஜெட்டீரும் சொல்லுகின்றது. (Vide p. 334). கோத்தர் களுடைய வீதி என்பது அதன் பொருள். பழைய குறிப்புகளில் "கோத்தர்கேரி" என்றிருப்பதாகவும் மேற்சொன்ன கெஜெட் டீர் கூறுகின்றது (Vide p. 334).

31. பங்கண்ணி என்ற இடம் எங்குள்ளதென்று தெரியவில்லை. பிரீக்ஸ் பேரகணி என்ற பெயரைத்தான் 'பங்கண்ணி' என்று குறித்துள்ளார் என்று தோன்றுகின்றது.

32. இது இன்றைய படகர்கள் சொல்லும் "ஜூவ்விக்கிண்டி" யாக இருக்கலாம்.

33. இன்று எப்பநாடு என்று அழைக்கப்படும் நீலகிரி படகர்களுடைய ஊர் பிரீக்ஸ் காலத்தில் "ஹெப்பநாடு" என்று அழைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஹெப்ப நாடு என்பது தான் சரியான பெயர். இதன் பொருள் ஹெப்பனுடைய நாடு என்பதாகும்.

34. ஹிளவக்குந்தை என்ற பெயரில் குந்தை என்ற பெயர் அடங்கியுள்ளது தெரிகின்றது; ஹிளவ என்பது ஒருவருடைய பெயராக இருக்கக்கூடும். அவர் ஒருவேளை அங்கே வீடு கட்டி வசித்திருக்கலாம். இக்காரணத்தினால் அது ஹிளவக் குந்தை என்று அழைக்கப்பட்டது போலும்.

35. இன்று 'கடநாடு ஊர்' என்று அழைக்கப்படும் பெயர் பிரீக்ஸ் காலத்தில் 'கொடநாடு ஊர்' என்று சொல்லப்பட்டுள்ளது. 'கோட' என்ற மூதாதையர் கட்டிய ஊரானதினால் அது கோடநாடு என்று அழைக்கப்பட்டு பிரீக்ஸ் காலத்தில் கொடநாடு என்று மருவி இப்போது கடநாடு என்ருகியுள்ளது என்று ஏற்கனவே விளக்கப்பட்டது. பிரீக்ஸ் குறிப்பிடும் கொடநாடு என்ற பெயரை நாம் 'கடநாடு' என்று புரிந்து கொள்ள வேண்டும்.

36. கக்கோரா என்பது கக்க ஊரு என்ற பெயரின் திரிபு. இந்த இடம் கோத்தகேரியிலிருந்து கோடநாடு ஊருக்குப் போகும் பாதையருகிலுள்ளது என்று பிரீக்ஸ் குறிப்பிட்டுள்ளார். (Vide op. cit. pp. 134-135).

37. ஏற்கனவே குறிப்பிட்ட 'ஜூவ்விக்கிண்டி' யாக இருக்கலாம்.

38. Gazetteer of the Nilgiris - p. 99

39. J. W. Breeks - An Account of the Primitive Tribes and Monuments of the Nilagiris.

40. Gazetteer of the Nilgiris - p. 99.

41. Ibid. p. 99.

42. Ibid. p. 99.

43. Ibid. p. 99.
44. Ibid. pp. 100-101.
45. Ibid. p. 101.
46. Ibid. p. 101.
47. 'கித்திரெ பன' என்று சொல்லப்படும் பெயர் 'கித்தூர் பன' என்னும் பெயரின் திரிபு என்று தோன்றுகிறது.
48. Breeks, op. cit. p. 102.
49. Ibid. p. 102-103.
50. தலையின் இடது பக்கம் என்று பிரீக்ஸ் சொல்லுவது தவருகத் தெரிகின்றது. படத்தில் இது தலையின் வலது பக்கத்தில் இருப்பதைக்காணலாம்.
51. Breeks-op. cit. p. 103.
52. Gazetteer of the Nilgiris - pp. 351-352.
53. Ibid. p. 352.
54. Richter - Manual of Coorg - p. 100.
55. Wilks - History of Mysore - p. i p. 15 (notes).
56. Dr. M. Chidananda "கன்னட சாசனகள சாம்ஸ்குருத்திக அத்யயன - A. D. 450-*1150*" pp. 316-319.
57. M. K. Bellie Gowder - 'Origin of the Badagas' unpublished Mss-(*1938-1941*).
58. K. A. N. Sastri - op. cit. p. *133*.

"The drum and the conch were employed on the field for signalling and the former to summon soldiers to arm. Each ruler and chieftain had a war-drum among his insignia. Not only was it carefully guarded, but it was bathed periodically and worshipped with loud mantras."

Edited and published by shri K. P. Raju, B.A., at "Shanthi Vana," Kadasolai, Nilgiris, and printed by shri K. Belli, B.Sc., at the ANNA ACHAGAM, Manjoor.

படகப் பெருங்குடி மக்களின் முன்னோர்களைப்பற்றி ஆசிரியர் இதுவரை செய்துள்ள ஆராய்ச்சி தெரிவிக்கும் உண்மைகள் வருமாறு

1. படகர்களுடைய ஆதி மூதாதையர்களின் பிறப்பிடம் மெசப்பட்டோமியா.
2. அவர்கள் அங்கிருந்து கி. மு. 4000-த்தில் இன்றைய ஆப்கனிஸ்தான், பலுச்சிஸ்தான், சிந்து ஆகிய பிரதேசங்களுக்குக் குடி பெயர்ந்தார்கள்.
3. இப்பிரதேசங்களிலிருந்து அவர்களின் சந்ததியினர் பின்னர் இந்தியாவின் பல பாகங்களுக்குப் பரவினார்கள்.
4. அவர்கள் பல இடங்களில் இராஜ்ஜியங்கள் நிறுவி அரசாண்டு வந்தார்கள்.
5. கி. மு. 1400-ல் இன்றைய பிஹாரிலுள்ள பாகல்பூர் ஜில்லாவிலும், கி. மு. 8-ஆம் நூற்றூண்டில் வங்காளத்தின் இன்றைய மால்டா ஜில்லாவிலும் 'கவுட' ராஜ்ஜியத்தை நிறுவியவர்கள் நீலகிரி படகர்களின் மூதாதையர்கள்.
6. கர்நாடக மாநிலத்தில் இப்போது சிரவண பெள்கொள என்றழைக்கப்படும் பண்டைய கள்பப்பு நாட்டில் கி. மு. 4-ஆம் நூற்றூண்டில் அரசாண்ட களப்பிரர்கள் படகர்கள்.
7. கி. மு 300 ல் இன்றைய ஆந்திரப்பிரதேசத்திலுள்ள குண்டூர் ஜில்லாவில் ஆட்சி புரிந்தவர்கள் படகர்கள்.
8. சரித்திரப் புகழ் பெற்ற விஜயநகர சாம்ராஜ்ஜியத்தை நிறுவி துங்கபத்திரா நதிக்குத் தெற்கே மகமதியர்கள் படையெடுத்து வராதபடிச் செய்தவர்கள் படகர்கள்.
9. மதுரையை மகமதியர்களின் ஆட்சியிலிருந்து விடுவித்தவர்கள் படகர்கள்.
10. நீலகிரியில் கி. மு. 300-லிருந்து படகர்கள் இருந்துள்ளார்கள்.
11. பிற்கால படகர்கள் கி. பி. 1296 முதல் கி. பி 1310 வரை நீலகிரிக்குக் குடி பெயர்ந்தார்கள்.
12. படகர்கள் திராவிட ராஜபுத்திரர்கள்.
13. படகர்களின் ஆதி முன்னோர்களைச் சேர்ந்தவர்கள் மெசப்பட்டோமியாவிலிருநது ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆசியா கண்டங்களுக்கும் குடி பெயர்ந்துள்ளார்கள்.

படக சமுதாய மக்களின் வரலாற்றைப் பற்றிய ஆசிரியரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பிரசுரிக்கும் உரிமை ஆசிரியருக்கே உரியது. இக்கட்டுரைகளிலிருந்து ஆசிரியரின் அனுமதியின்றி யாரும் எவ்விஷயத்தையும் பிரசுரிக்கவோ அல்லது வேறு விதத்தில் பயன்படுத்தவோ கூடாது

— ஆசிரியர்

ARAICHI - Tamil Monthly - Regd. No.